30

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
2-JUL 1912
MADRAS

உ

சுந்தர கணேசர் துணை.

# பலவித சாமர்த்திய
# ஜெகஜ்ஜால
# புரட்டன் கதை.

இஃது
மதராஸ் கலியுகவர்த்தமானிபத்திராதிபராகிய
கவிராஜ
**கந்தசாமிபிள்ளை யவர்களால்**
இயற்றப்பட்டு.

நாகப்பட்டணம்
முருகேசமுதலியார் குமாரன்
**N-சரவணமுதலியா ரவர்களால்,**

*1912.*
*Registered Copy Right*

] [இதன் விலை அணா 4.

... DIAMOND PRESS,
...RMANPET, MADRAS.

0-,892MKP,J
NK
181823

உ

சுந்தர கணேசர் துணை.

பலவிதசாமர்த்திய

# ஜெகஜ்ஜால புரட்டன் கதை.

இஃது

மதராஸ் கலியுகவர்த்தமானி பத்திராதிபராகிய

கவிராஜ

**கந்தசாமிபிள்ளை யவர்களால்**

இயற்றப்பட்டு.

நாகப்பட்டணம் முருகேச முதலியார் குமாரன்

**N - சரவணமுதலியாரவர்களால்,**

சென்னை

அமெரிக்கென் டைமெண்ட் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

Registered Copy Right

*Price 4 Annas*] [இதன் விலை அணா 4

## ரிஜிஸ்டர் காப்பிரைட்டின்

# அறிவிப்பு.

இதனால் சகலமான கனதனவான்களுக்குந் தெரியபடுத்துவது யாதெனில், இந்த **ஜெகஜ்ஜாலபுரட்டன் கதையை**, மதுரைமாநகரம் சுந்தர ஜெயவீர சூர தீர கவிராஜ கந்தசாமிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு யானாகிய N. சரவணமுதலியாரவர்களால் பொருளுதவி புரிந்து சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு கனம் பொருந்திய கெவர்ன் மெண்டார் அவர்களது 1867௵ த்திய 25-வது ஆக்ட்டு 20-வது செக்ஷன் 8-வது ரூல்சின் பிரகாரம் [**ரிஜிஸ்டர் காப்பிரைட்**] செய்யப்பட் டிருக்கிறபடியால் இதை வேறு பாஷையில் மொழிப்பெயற்றுவது அல்லது இதில் கண்டிருக்கும் பாகங்களையாவது அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை எல்லா செலவுகளுடன் வசூல் செய்யப்படும் என்னுடைய உத்திரவின்றி இந்நூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு,

**N. சரவணமுதலியார்.**

நெ-**19**. முத்துக்கிருஷ்ணன்தெரு,
மின்ட் பிள்டிங் போஸ்ட்டு மதராஸ்.

செல்லெரித்த மூஞ்சிக்கு
கல்லிழைத்த கம்மல் என்பதுபோல

# விகட சுந்தரி என்னும் புத்தகம்.

## ஓர் வேடிக்கையான கதை.

இந்த விகடசுந்தரி கதையில் எல்லாம் சிரிப்பு எல்லா தமாஷ் எல்லாவயடிக்கையான விநோத விநோத கதைகளும் இல்லறமார்க்கத் தியல்பும் விபசாரத்தின் விபரீதகலகங்களும் பதிவிரதா லக்ஷணங்களும் பாபபுண்ணியத்திலேபும் ஊழ்வினை சம்பவத்தின் விநோதக் காக்ஷிகளும் வாசிப்பவர் மனதைபிரமிக்கச்செய்யும் விநோதமான அகஸ்ய வசனங்களும் சன்மார்க்க ஸ்திரீகளை மணந்து சதா சந்தோஷத்தில் மூழ்கி பந்துஜன மித்திருருடன் ஆனந்த செய்தும் படியான சமயோசிதமாகிய நீதி நூல்களை இதில் சேர்த்திருப்பதால் இந்த புத்தகத்தை வாசிப்போர் இகத்தில் கீர்த்தியும் பரத்தில் முக்திசெய்வது மல்லாமல் துன்மார்க்க ஸ்திரீகளை மணந்து வெகுதுயரடைந்து சரியொத்த சிநேகிதர் நகைத்துப் பரிகாசஞ் செய்து உற்றூர் உறவின்முறையார் பந்து ஜெனங்கள், அல்லது பகைஞரால் பற்பல துயரில் மூழ்கி அற்பறிடம் சிக்கிஅலைந்து தவிழ்த்துக் கண்ணீர்விட்டுக் கதரியழுது வயற்றுச்சாமியார் வேஷ போட்டக்கொண்டு திண்ணை தூங்கியா யலைந்து திண்டாட்டம் போவேதும் இவையனைத்தும் கண்கண்ட காக்ஷியைப்போல் அமைத்திருக்கும். இந்த விகடசுந்தரியின் கதாமஞ்சரியை வாசிப்பவர் வெகு ஜாக்கிறதையார் துஷ்டரிடஞ் சிக்கித் துயரப்படாமல் அறிவானந்தமாய்ப் பிழைத்து இகத்தில் கீர்த்தியும், பரத்தில் முக்தியு மெய்தியிருப்பார். இப்புத்தகம் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 8. தபாற்கூலி அணா அணா 2.

# சோதிடரகசிய மென்னும்.

## ஆயுள்கணித மூலமும் உரையும்.

ஆழிசூழுலகின்கண் வசிக்கும் ஆரிய அன்பர்கள் யாவத்திராட்கும் உபயோகமாகவும் அவரவர்கட்கு வேண்டுந்தோறும் நடக்கும் பலாபலனை யறிந்துய்வாரெனக் கருதிச் சந்தணப்பொதிகைச் செந்தமிழ் முனிவராகிய அகத்திய முனிவர் முதலாயினோர் செய்யுள் நடையில் பலசோதிட சாஸ்திரங்கள் எழுதியுள்ளரென்பது பிரசித்தம்.

ஆயினும் அங்கவர்கள் எழுதிய நூல்கள் நன்கு கற்றுணர்ந்தவர்களுக்கேயன்றி யனையோர்க்கு எளிதில் பயன்படுவ திலவென்றும், விரிவாயிருத்தலின் கற்றுணர்வதற்கு நாள் பல வேண்டுமென்று சிற்சில பாகத்தை சிற்சிலரே கூறியிருத்தலின் அவற்றை யொருங்கே கற்றுணர்வது மிக்கசிறமென்றும் எண்ணிபற்பல கணிதநூற்புலவர்களின் அனுகிரகத்தின்படி அடியேன் அவற்றையெல்லாம் ஒருங்கித்திரட்டிக் கத்தியுருமமாகச் சுருக்கியும் ஆசிரியரன்றித் தாமாகவே கற்றுணரவேண்டிய நெறியை அறிக்கியும், வேண்டு மிடங்களிற் பெறுக்கியும், தெளிவான பாஷை நடையில் செரிக்கியும் கற்றவர் கல்லாதவர் யாவரும் நன்குணரும் பொருட்டு உலோகோபகாரமாக சோதிடரம்சியமென்னும் அனுபோக ஆயுள் கணிதமெனப் பெயரமைக்கப்பட்டுள்ள இந்நூலிற் பெருமையாதெனில் சிசு பிறந்த நாள் முதற்கொண்டு மறிக்கும் நாள், மாதம், வருடம்முதலியதும் தாயுடன்பிள்ளை மறிப்பதும், தந்தை மறிப்பதும், சகோதரர் முதலான பிறப்பினர் மறிப்பதும், தாய்தந்தையர் சகோதரர் முதலானவர்களுக்கு வரும் கண்டமுதலியதும், மரமேறி விழுந்து, வீடுயிடிந்து விழுந்தும், ஆறு கிண, குளம், கூபம் முதலியதில் விழுந்தும், மிருகஜாதிகளாலும், ஆயுதங்களாலும் யுத்தங்களினாலும் வைப்பு, ஏவல், சூனியம் பேய்பிசாசுகளாலும் பலவித துற்பங்களால் அடையும் மரணங்கள் யாவும் இந்நூலில் முன்னதாகவே கண்டுக் கொள்ளலாம். இதன் விலை ரூபா 1 0 0

# முகவுரை.

சீருலாவிய நற் செந்தமிழுணர்ந்த வித்வசிரோன்மணிகளாற் புகல
ருங் கீர்த்திவாய்ந்த தேன்தேசத்தில் வசித்துலாவும் மாந்தர்கள்தான்
அறிவு, ஆலோசனை, யுக்தி, புத்திபிற் சிறந்திருப்பவர்களென்றும்,
வடதேசத்தில் வசிப்பவர்கட்கு யாதொரு தந்திரமும் தெரியாதென்று
தென்தேசத்தின் வெல்வாயர்கள் தன்னைத்தானே புகழுந்தன்மையாய்ச்
சொல்லிக்கொண்டிருப்பது சரியல்ல. அவனியிற் ஜனித்த ஜீவர்கட்கு
அறிவும், மனதும் பொதுவாகவே அமைந்திருக்கின்றன. ஆனால், பூமி
யிலிருக்கும் சகல தேசத்தினர்கட்கும், அறிவு, அறிவின்மை, மதி,
மதியின்மை, சுறுசுறுப்பு, சோம்பல், தைரியம், பயம், தரித்திரம், செ
ல்வம், வாழ்வு, தாழ்வு, பெருமை, சிறுமை நன்மை, தீமை, சுகம், துக்க
முதலானவை வரிசைக்கிரமமா யமைந்திருக்குமன்றி சிலதேசத்தில்
நன்மையும், சிலதேசத்தில் தீமையும் நேர்ந்திடாது. ஆண்டவன் ஜீவர்
கட்கு அறிவைக்கொடுத்து மனப்பேயை ஜாக்கிரதையாய் நடத்துவா
யெனின் ஊழ்வினை சம்பவத்தினால் அஞ்ஞான மனமயக்கமெனும்
இருள்சூழ்ந்து அறிவைப்புறப்படுத்தி மதியைக்கலைத்தால் ஆசாபாசத்
திற் சிக்கி பேராசைப் பொருள் நஷ்ட மென்பதுணராமல் வஞ்சகர்
மோசத்திற்சிக்கி அவதிப்பட்டு, ஆற்றொணா சஞ்சலத்தினாலுற்ற அலை
ச்சலாற்களைத்திளைத்து சஞ்சலப்படுவார்.

ஆனால் உலகில் ஜனித்த மாந்தர்கள் என்னென்ன கஷ்ட
நிஷ்டூர மடைந்தாலும் எவரெவரிடம் கஷ்டத்தை யனுபவித்
தாலும் தாங்களிருக்கும் நிலைபிசகலாகாது. தன்னைப்போன்ற மனிதர்
கட்கு அஞ்சுவதெனின் அவர்கள் அற்பஜெந்துவுக்குச் சமானமாகும்.
ஆகையால் நயவஞ்சகரிடத்தின் சிநேகித்தாலும் வெகு பக்குவமாய்த்
தப்பித்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள்கதி ஆபத்தா
க்வே முடியும். ஒருவன் பலபேரிடத்தில் கஷ்டநிஷ்டூர மடைவதுமாத்
திரம் அவனுடைய முன்ஜனனத்தின் பாபகீர்த்தியமாகும். ஒருவன்
ஊராரை யெல்லாம் மோசஞ் செய்வானே வென்றால் அறிவு யாவ
ருக்கும் பொதுவானபடியால் மனப்பேயின் சேஷ்டைப் பலவித
மாயமையுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலும் யாதாமொருவரும்
ஊராரை மோசஞ்செய்வதற்குத் துணிந்துவிட்டார்களானால் உலகமே

மயக்கிப்போகும்படியாய்ப் பலவித ஆசைவார்த்தையால் மனிதர்களை நம்பச்செய்து அநியாயஞ் செய்துவிடுவார்கள்.

ஆகையால் அத்தகைய துஷ்டரிடத்தில் மாத்திரம் வெகு ஜாக்கிரதையாய் ஜீவிக்கவேண்டும். அவர்களைக்காணில் வெகு உத்தமர்போலவே யிருப்பார்கள். அவ்விதமிருந்திடினும் அகத்தின் லக்ஷணம் முகத்திற்றெரியுமென்பதுபோல ஆராய்ந்துணர்ந்து சிநேகஞ்செய்யவேண்டும். அதை கவனியாமல் மோசம்போனவர்கள் அநேகரிருக்கின்றனர். அதற்கு கற்பனு அலங்கார உதாரணமாக ஜகஜ்ஜால புரட்டன் கதையைச் சார்பாக உலகினர்க்குத் தெரிவித்து யாதொருவரும் மதிமயங்காதிருந்து நயவஞ்சகரின் மோசத்திற்குட்படாமல் சதா சுகியாய் மனைவி மைந்தருடன்வாழ்ந்து, இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியும் பெறுவாரென்பதற் கியன்றவிதமாய் நீதிசாஸ்திர தொகுப்பனைத்தும் தெள்ளிதாய்ப் புகலலாயினேன். ஆகையால் இதனை வாசிக்கும் நண்பர்கள் இது ஓர் வேடிக்கையுள்ள தமாஷான கட்டுக்கதையென்றெண்ணுமல் அறிவுக்கு ஆதாரமான நீதிசாஸ்திரமென்றே மதித்து ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலிருக்கும் ஆழ்ந்த இரகஸ்யமனைத்தும் அன்புடன் கவனித்து அறிவினுலுணர்ந்து தெளிவுடையோராயிருந்து சுகானந்தமாய் வாழ்ந்திருப்பாரென்பதற்காகவே இச்சரித்திரக் கோர்வையை ஓர்வித கதாசாரமாய் இயற்றலாயினேன்.

இப்படிக்கு,

கவிராஜ கந்தசாமி பிள்ளை.

மதராஸ்.

உ

## பலவித சாமார்த்திய

# ஜகஜ்ஜாலப்புரட்டன்கதை

திருவளர் செல்வந்தழைத்தோங்கும் பரதகண்டத்திற் சிறப்புற்றோங்கிய வடதேசத்தில் ஜகஜ்ஜாலப்புரட்டனென்பவன்வசித்திருந்தனன். அவனுக்கு அவனே நிகரின்றி மற்றவர்களை மதிப்பிட்டுச் சொல்லதற்கியலாது. அப்படியிருக்க அந்நகரிலிருக்கும் உலகபிரட்டனென்னும் ஓர்வாலிபன் அவனுடைய சமர்த்தைக் கவனிப்பதற்காக அவனிடம் தந்திரமாய் வந்து விசாரிப்பதாயினன்.

உலகபிரட்டன்:—ஐயா! நீர்என்னென்ன சமர்த்தெல்லாம் செய்குவீர்?

ஜகஜ்ஜாலபுரட்டன்:—அடடா? ஈதென்ன ஆச்சரியம்? என்னுடைய சமர்த்தைக்கேள்வியுற்றால் இந்திராதி தேவரெல்லாம் சந்தோஷப்படுவார்களே. நீகேட்பதெனின் அஞ்சித்துடித்து நெஞ்சங்கலங்கி பயப்படுவாயல்லவோ?

உலகபுரட்டன்:—அப்பப்பா! யானேஉலகப்புரட்டனென்றால் என்னிலும் அதிக சமர்த்துடைய உன்னை உனதுதாய் எவ்விதமாய் வயற்றில் பத்துமாதம் வரையினும் சுமந்திருந்தனள் அறிகிலேன்.

ஜகஜ்ஜாலப்புரட்டன்:—ஆ! அதற்கென்ன சந்தேகமா? யான் பிறந்தபோது நீ எதிரிலிருந்தால் அப்போதே உன்னை எமபுரிக்கனுப்புவேன். ஆனால் அருகிலிருந்தவரெல்லாம் என்னை சமாதானப்படுத்திவிட்டார்கள் இல்லாவிட்டால் யான் அப்போதே அனுமார் இலங்காதகனஞ்செய்ததுபோல் ஊரைக்கொளுத்தி விட்டிருப்பேன் ஆயினும் பெரிதல்ல, இப்போதாயினும் எனக்குமாத்திரம் நான்குமுகமிருந்தால் பிர்ம்மாவைத்துரத்திவிட்டு யானே அந்த பிர்ம்மா உத்தியோகத்தில் அமர்ந்திருப்பேன், என்ன செய்யலாம் மூன்று தலைகுறைவாயிருக்கிறதே.

உலகபரட்டன்:—ஐயா! கோபித்துக்கொள்ளாதீர். பிர்ம்ம வேதன் மிகவும் நல்லவராச்சுதே எமனைத்துரத்திவிட்டால் யாதொருவரும் சாகாமலிருப்பார்கள்.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—ஆம்! ஆம்!! அப்படியேசெய்கிறேன். இதற்காக நீர்மன வருத்தப்படாதீர்.

உலகபுரட்டன்:—எனது வருத்தத்தை கேள்வியுற்றநேயா! அந்த எமனாலே எனது பாட்டனும்பாட்டியும் சோற்றைமறந்து சுடுகாட்டுக்குப்போய்விட்டனரே. இதனை நினைந்திடில் எனக்கு மெத்த கோபமாயிருக்கின்றது ஆனாலும் நாலைந்து நாளைக்குள்யானே போய் அந்த எமனை தலைகாட்ட வொட்டாமல் அடித்துத் தாத்தும்படியாய் சிவனிடத்திற் சொல்லுகிறேன், அவர் கேட்காமற்போவாரா?

ஜகஜ்ஜால புரட்டன்:—அடடா! அப்படி யொன்றும் சந்தேகமாய் பேசாதீர். ஈசனுக்கு, காலகாலன், கூற்றையுதைத்தோன் யென்னும்பெயர் வந்தகாரணமும் உனக்குத்தெரியுமா?

உலகப்புரட்டன்:—ஐயா! அதுமாத்திரம் எனக்குத்தெரியாது, கொஞ்சம் தயவுசெய்து சொல்லவேண்டும்.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—நீஎன்ன கல்வியினுட்பங் கவனித்திலாயோ மார்க்கண்டேயன் என்னும் ஓர் பிராமணச்சிறுவனுக்கு ஆயுள் முடிந்ததென்று எமதருமன் எருமைக்கடாவின் மீதேறி ஓடிவந்து, பாசக்கயிற்றை அவன் கழுத்தில் போட்டவுடனே மார்க்கண்டன் சிவசிவாவென்றான், சிவன் கோபித்து எமனை திடீரென்றுதைக்க எமன் துடித்து மரணமானான். உடனே பூமிதேவி திரிமூர்த்திகளிடம் சொல்ல, பிர்மா முதலானவர்கள் ஓடிவந்து சிவனை வணங்கி மன்னிப்புகேட்க, சிவன் மனமிரங்கி எமனை எழுப்பினார். அதனாலேதான் சிவனுக்கு கால காலன் கூற்றையுதைத்தோனென்று பெயராயிற்று. மார்க்கண்டேயருக்கு மாத்திரம் பிராமணா எமகாதகா! வென சில வெல்வாயரெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

உலகப்புரட்டன்:—ஐயா! நீர் சொன்ன பதத்திற்கு பதவுரை எவ்விதமாயமைந்தன.

ஜகஜ்ஜாலபுரட்டன்;—அடா! இது தெரியாதா காலகாலன் எமனுக்கும் எமனானவன் கூற்றையுதைத்தோன் காற்றுக்குச்சமானமாகிய ஆவியைப்பிடித்துக்கொண்டுபோகும் கூற்றுவனாகிய எமனையுதைத்தவன் எமகாதகன், எமனுக்குக் கொடுமைவிளைப்பவன் என்பதாய் பத அர்த்தம் பிரிவினையாயிற்று.

உலகப்புரட்டன்;—சரி! சரி!! நீர்மாத்திரம் எனக்குக் கொஞ்சம் சகாயம் செய்தால் காற்று நெருப்பும் கலந்தாற்போல் உலகிலுள்ள

வரையெல்லாம் ஒரு புரட்டு புரட்டி அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் திரவியத்தை அபகரித்துக்கொள்ளலாமே.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—ஆம்! ஆம்!! அதற்கென்ன சந்தேகமா? சிலமோசக்காரர்கள்,

கலிவிருத்தம்.

பெருத்த செல்வங்கள் எப்படி வருமெனின்
உருத்தும் உண்மையாய் நடந்திடில் வந்திடா
கருத்துள் மிஞ்சிய மோசமும் நாசமும்
பொருத்தி ஊரைப் புரட்டிட வேணுமே

என்னுந் தன்மையாய் நயவஞ்சக மோசஞ் செய்யும் துஷ்டர்கள் துர்க்குணத்தை துணைவகித்து சகலரையும் வஞ்சித்து அகப்பட்டுக்கொண்டால் அடி, உதை அபிஷேகாதி வெகு விமரிசையாய் பெற்றுக்கொண்டு ஆபத்தடைகுவர் என்னைப்போன்ற உத்தமர்கள் சில்லரையில்செய்கிற வழக்கமில்லை ஓரேதடவையில் இரணியாக்ஷசன் பூமியைப் பாயாய்ச் சுருட்டிக் கடலில் வைத்துக்கொண்டிருந்தது போல ஊரை ஒரு புரட்டு புரட்டி யாருக்கும் பயப்படாமல் திரிந்துக்கொண்டிருப்பேன்.

உலகப்புரட்டன்:—ஆம்! ஆம்!! இதுதான் தேவை ஆனால் தென்தேசத்தினர் வெகு சமர்த்தரென்றும், வடதேசத்தினர் ஒன்றுக்கும் உதவாத மூடாத்மாவென்றும் நினைக்கின்றார்போற்காண்கின்றது. ஆயினும் நாம் வடதேசத்திற்பிறந்து வளர்ந்தவராயிருக்கின்றோமே நாமென்ன கையிலாகாதவர்களா? சீக்கிரம் புறப்படுவீர். ஒரு கை பார்த்துவிட்டு வருவோம்.

என, சொல்லி வாய்மூடுமுன்னமே ஜகஜ்ஜாலப்புரட்டன் துள்ளுக்காளைப்போல எகிரி தோள் தட்டிக்கொண்டு அங்கவஸ்திரத்தைத் தலையில் சுற்றிக்கொண்டு, அப்படிப்பட்ட தென்தேசத்தாரை இந்தக்ஷணமே ஒரு கைபார்த்துவிட்டு வருவோமென்று கையில் நூறுவராகனை எடுத்துக்கொண்டு, உலகப்புரட்டனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு உல்லாசமாய்ப் புறப்பட்டு தென்தேசத்திற் சென்று ஓர் சத்திரத்திற்போய் உட்கார்ந்திருந்தனர். அங்கிருக்கும் சில மனோகர்விகள் அவர்களை பார்த்து சிரித்துக்கொண்டு, இவ்விருவரும் வடதேசத்தினர்போற் காண்கிறது. இவர்கள் போட்ட சாதம் புசிப்பதும் வைத்த சுமைசுமப்பதுமே தொழிலாயிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லையென்றும் சில[illegible]சோற்றுக்குக்கேடும் பூமிக்குப் பாரமுமாய்ப் பிறந்த சோம்பேரிக

ளென்றும் பலவிதமாய் இகழ்ந்து பரிகாசித்திடலாயினர். ஈதனைத்தும் கேள்வியுற்ற ஜகஜ்ஜாலப் புரட்டனுக்குக் கோபம் அதிகரித்து அட டா! துஷ்டர்களே! குலைக்கும் நாய் வேட்டையாடுமா? கொஞ்சமே னும் ஆலோசியாமற் பேசுகின்றீரே யென ஞாயமாய்ப் புகன்றிடினும், அவர்கள் கேட்காமல் பத்துபேர் சேர்ந்தால் ஒருவனை பைத்தியக்கா ரனைச் செய்துவிடுவாரென்பதுபோல சத்திரத்திலிருக்கும் மனேகர்வி களுடனே அந்நகர வாசிகளும் கூடிக்கொண்டு ஜகஜ்ஜாலப்புரட் டனையும், உலகப்புரட்டனையும் பரிகாசஞ் செய்துக்கொண்டிருந்தனர். இந்த விபரீதத்தைக் கவனித்த ஜகஜ்ஜாலப்புரட்டனனவன் உலகப் புரட்டனை யழைத்துக்கொண்டு போய் இதோபார்த்தீரா தென்தேச த்தினர்.

விருத்தம்.

ஏருழுபவ னிளைத்தால் எருது மைச்சினங் கொண்டாடும்
பாரில்தேள் கொட்டாவிட்டால் பகர்பிள்ளை பூச்சியாகும்
கூறியசிங்கம் சும்மா குகைதனி லிருக்குமாகில்
வீரியஞ்செலுத்தி யானை மேல் விழுந்தடித்திடாதோ''

என்பதுபோல நாம் தன் ஊருக்குயானை அயலூருக்குப்பூனையென்ப தாயிருந்தால் அவமானமடைவதுடன் ஆபத்தெய்தும்படியாய் நேரி டும். ஆகையால், நாமிந்தக்ஷணமே உஷாராயிருக்க வேண்டுமென்று, ஒன்றுந்தெரியாதவர்போல கொஞ்சதூரத்திற்சென்று ஓர் அம்பட்டன் கையில் இரண்டுபணம் கொடுத்து இருவரும் இராஜகுமாரர்போல முகவஜீகரமாய் க்ஷவரம் செய்துக்கொண்டு இருபது விராகனில் கிலிட் சாமான்களாகிய, கடுக்கன், காப்பு, கொலுசு, விரல்களுக்கு மோதிரம் முதலானவை வாங்கி பளபளப்பாய் அணிந்துக்கொண்டு வண்ணான் கையில் இரண்டுவிராகன் கொடுத்து எங்களிருவருக்கும் சரியான வே ஷ்டி, சரிகைதலைப்பாகை சாய அங்கவஸ்திரம் முதலானவை ஒருமாத த்திற்கு நூதனமாக கொடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று உத்தி ரவுசெய்துவிட்டு, அவனிடத்தில் வாங்கிய அந்த வஸ்திரங்களை அணிந் துக்கொண்டு தச்சவாடியிற்சென்று மாதம் இருபதுவிராகன் கொடுப்ப தாய் வாடகைவண்டி பேசி அதன்மீதில் ஆரோகணித்து இராஜகுமா ரர்களைப்போல அந்திப்பொழுதானல் அந்நகரமுழுதும் சுற்றிப்பார் த்துக்கொண்டு வருவதுமாயிருப்பார்கள். அந்நகரவாசிகளும் இவர் கள் யார் இராஜகுமாரர்களைப்போலிருக்கின்றார்களே யென்று வேடி க்கைப் பார்த்துக்கொண்டு நிற்பார்கள்.

ஜகஜ்ஜாலப்புரட்டனும், உலகப்புரட்டனும் தாங்களிருவரும் வசிப்பதற்காக ஓர் பெரிய பங்களா ஒன்று வாங்கிக்கொண்டு அதில் அந்நியர் பிரவேசித்தால் மர்மம் வெளியாகிப் போகுமென்று ஓர் சோற்றுப்பானையும், இரண்டு குழம்புசட்டியும், அம்மி குழவி முதலாகிய சாமான்களும் வாங்கி வைத்துக்கொண்டு வெளிக்கதவை தாளிட்டு தாங்களே சமையல் செய்து சாப்பிட்டுக்கொண்டு, ஊரின் உளவுகளனைத்தும் கவனித்துக்கொண்டிருக்கையில், ஓர்நாள் இவ்விருவரும் ஆலோசனை செய்து, ஓர் கணக்கப்பிள்ளையும் இரண்டு சேவகரையும் சம்பளத்திற்கு அமர்த்திக்கொண்டு பங்களாவின் வாசற்படியில் கணக்குப்பிள்ளையை உட்கார்ந்து கணக்கெழுதவும், இரண்டுசேவகரும் அந்த வாசலிற்றானே காவல் புரிவதுமாய்க் காலங்கழித்திருந்தனர். இப்படி பத்துநாளான பின் அந்த ஜகஜ்ஜாலப்புரட்டனும், உலக புரட்டனும் தமது வழக்கப்படியே நான்கு குதிரைகள் பூட்டிய அழகானவண்டியின்மீதேறிக்கொண்டு அந்நகரத்தின் மன்னனைக்காணவேணுமென்று அரண்மனையில் வந்தார்கள். இராஜன் இவர்களிருக்கும் ஆடம்பரத்தைக்கண்டு இவ்விருவரும் எந்தவூர் அரசர்களோ? வென்று, சந்தேகித்தவனாய் அவர்களையே விசாரிக்கலாயினன்.

அரசன்:—ஐயா! நீங்கள் யாவர்? உமது நாமதேயமென்ன நீர் வசிப்பது எந்நகர் யாதுகாரணமாய் இங்ஙனம் வருகலாயினீர்?

ஜகஜ்ஜாலப்புரட்டன்:—அரசே! யாங்கள் வடதேசத்தினர். வியாபார விஷயமாய் வருகலாயினோம்

அரசன்:—ஐயா! நீங்களென்ன வர்த்தகத்தைநாடி இங்ஙனம் வருகலாயினீரோ? தெரிவிப்பீராயின், யான் அவற்றிற்கிசைந்த நன்முயற்சி யாதேனும் புரிவேன்.

உலகப்புரட்டன்:—அண்ணேன்! இம் மன்னன் மிகவும் உத்தம குணாளர் இவரால் நாம் நினைந்தவையெல்லாம் முடியும்.

ஜகஜ்ஜாலப்புரட்டன்:—ஆம்! ஆம்! அதற்கென்ன சந்தேகமா? தம்பி! அரசனென்றால் யாவரும் ஒரேவிதமான குணத்தினராயிருப்பரோ? இவர் மெத்த உத்தமரானபடியினாலேதான் யான் இந்நகரத்தைத் தேடி வருகலாயினேன்.

அரசன்:—ஐயா! நீங்களும் நல்ல வியாபாரிகளானதினாலே யான் மெத்தவும் சந்தோஷப்படுகிறேன். தற்சமயம் என்னென்ன சாமான்கள் கொண்டுவந்திருக்கின்றீர்கள்?

ஜகஜ்ஜாலப்புரட்டன்:—அரசே! யாங்கள் இச்சமயம் விற்பனைசெய்வதற்கிசைந்த சாமான்கள் யாதொன்றும் கொண்டுவரவில்லை. பத்துலக்ஷவிராகன் கொண்டுவந்திருக்கின்றோம். அஃதேதனென்றால், இந்த தென்தேசத்தில் கெம்புக்கல், பச்சைக்கல், வெள்ளைக்கல், ஸ்படிகக்கல் புஷ்பராகம் முதலாகிய நவரத்னக் கற்களிருக்கின்றதென்று கேள்விப்பட்டேன் ஆகையால் இவ்வூராரிடம் மீதியாயிருப்பதை ஒட்டிக்கிரட்டிப்பாய் அவர்கள் சொன்ன விலையைக்கொடுத்து வாங்கிக்கொள்வோம். அதற்காக நீர் தயைபுரிந்து வெட்டியானால் நகரமுழுதும் பறைசாற்றச் செய்வீர்.

என, புகன்றவுடனே மர்மமுணராத மன்னன் இவர்கள் உண்மையானவரென மதித்து, உமது இஷ்டப்படியே நடத்துகிறேனென்று புரட்டர்களிருவருக்கும் செலவுகொடுத்தனுப்பிவிட்டு தலையாரியை வரவழைத்து, வெட்டியானால் புரட்டர்கள் சொன்னவிதமே பறைசாற்றச் செய்வீரென்று ஆக்ஞாபித்தனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற வெட்டியானும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, புரட்டர்கள் புகன்ற பொய்வார்த்தையை மெய்யாக ஸ்தாபித்து, ஐயா நகரவாசிகளே நமது நகரில் புதிதாய் வந்திருக்கும் வர்த்தகருக்கு கெம்புக்கல், பச்சைக்கல், வெள்ளைக்கல், முதலாகிய நவரத்னக்கற்கள் வேண்டுமாம். வைத்திருப்பரெல்லாம் அவர்களிடம் கொண்டுபோய்கொடுத்தால் நீங்கள் சொன்ன விலைக்கு ஒட்டிக்கிரட்டிப்பாய் பணங்கொடுத்து விடுகின்றனராம். இது நமது அரசனுடைய உத்திரவென்று சொல்லிவிட்டு போயினர்.

இங்ஙனம் இவ்விதமாகிய ஜகஜ்ஜால மாயா மயக்க உலகபுரட்டின் வேடிக்கை விபரீதமாயிருக்கையில் மர்மரகஸ்ய மின்னதென்றுங் கவனித் துணர்கிலாத அந்நகரவாசிகள் பேராசைப்பொருள் நஷ்டமென்பதையுங்கவனியாமல் அடடா! ஈதென்ன அதிர்ஷ்டானுகூலம் எவனோ பொழுதோடே கெட்டுப்போகிறவன் புறப்பட்டாற்போலிருக்கின்றது. அவனை ஒரு தினத்திற்குள்ளே மோசஞ்செய்து ஒட்டாண்டியாக்கிவிட்டு நாமனைவரும் தனவந்தராய் விடுவோமெனும் மனமகிழ்ச்சியாய் அவரவர் அணிந்திருக்கும் கடுக்கன், கம்மல், அட்டிகை, முருகு, புலாக்கு, திருகாணி கொப்பு, சாப்பளி, மோதிர மென்னும் நவரத்னமிழைத்த ஆபரணங்களையெல்லாங்கழற்றித் தட்டானிடத்திற்கொண்டுபோய் கல்லுவேறு பொன்னுவேறாகபிரித்துக் காயிதங்களில் மடித்துகொண்டு புரட்டர்களிருக்கும் பங்களாவில் வருகலாயினர். அச்சமயம் ஜகஜ்ஜாலப்புரட்டனும் உலகப்புரட்டனும் வந்தஜனங்களை வரிசையாய் உட்காரவைத்து, கணக்குபிள்ளைக்குச் சொல்வதாயினர்.

உலகட்புரட்டன்:—ஐயா! கணக்கப்பிள்ளே! இதோ வந்திருக்கிறவர்களிடமிருக்கும் கல்லுகட்குகிரயம் அவர்கள் சொல்லும் கிரயத்திற்கு இரட்டிப்பாய்க் கொடுப்பதாகக் கணக்கெழுதி அதில் அவரவர்கள் பெயரையும் அடையாளமாக எழுதிவைத்துக்கொண்டு அனுப்பிவிடுவாய். இன்றைய எட்டாவதுநாளில் எவ்வளவு தொகையாகிறதோ கணக்குபார்த்து தொகையைச் செலுத்திவிடுவோம்.

ஜக்ஜ்ஜாலபுரட்டன்:—ஐயா! தென்தேசத்தினரே! யாங்கள் வடதேசத்தினராகையால் எங்களுக்கு சூதுமார்க்கமாகிய வஞ்சக நினைவு கிடையாது. ஆண்டவனுக்குப் பொதுவாய் உம்முடைய பொருளுக்குத் தகுந்த மதிப்புபிரகாரம் தொகைசொல்லவேண்டும்.

என! நயவஞ்சகமாய்ச்சொன்ன மர்மரகஸ்யத்தை கவனித்து அவ்வூரரனைவரும் அடடா! இவர்கள் முழுமூடராயிக்கின்றனரே. நாம் இவர்களை நன்றாய் ஏமாற்றி விடுமோமென்று தமக்குதாமே ஆலோசித்து ஆற்றொணு சந்தோஷமடைந்து, காற்றுள்ளபோதே தூற்றிகொள்ளவேண்டு மென்னுந்தன்மையாய் இச்சமயமே இவ்விருவரையும் ஏமாற்றி இவர்களிடமிருக்கும் பொருளையெல்லாம் அபகரித்துக்கொள்ளவேண்டுமென்னும் பேராசையினல், விஸ்வாசபூனைபோல பாசாங்குசெய்து மிகவும் தந்திரோபாயமாய் புரட்டர்களின் அருகில் உட்கார்ந்துக்கொண்டு, ஐயா! வடதேசத்தினரே ஒருவரையொருவர் மோசஞ்செய்வதாற்பயனென்ன இன்றைக் கிறந்தால் நாளைக்கிரண்டுநாள்தானே, அப்படியிருக்க ஐயோ பாபம்! நீங்களோ அந்நியதேசத்தினராச்சுதே உங்களைமோசஞ்செய்பவர் விளங்குவார்களாவென்று சொல்லிக்கொண்டே தலையைத்தடவி மூளையை உருஞ்சுந் தன்மையாக வஞ்சகவார்த்தையாடிக்கொண்டே பத்துவிராகன் பெறுமானதை நூறுவிராகனுகசொல்லி கடிதத்தில் மடித்துக் கணக்குப்பிள்ளையினிடம் கொடுத்தனர். அவன்தமது எஜமான்களாகிய புரட்டர்கள்சொன்னவிதமே அந்தக்கல்லுகளைமடித்துக் கொடுக்கும் காயிதத்தின்மீது சொந்தக்காரர் பெயரையுமெழுதிஅவரவர்கள் சொல்லும் தொகையை இரட்டிப்பாய் எழுதி அவைகளுக்கு கயிறுகட்டி பெட்டியில் வைத்துக்கொண்டு, புரட்டர்கள்குறிப்பித்தநாளையில்வந்து பணத்தைப்பெற்றுக்கொண்டு போவீரென்று சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தனன்.

இவ்விதமாய் இரண்டு மூன்றுதினத்திற்குள் அந்நகரவாசிகளனைவரும் அணிந்திருந்த ஆபரணதிகளை யெல்லாம் அழித்துவிட்டு செவி நாசியனைத்தும் மூளியானதைப்போலாயினர், இங்ஙனம் தென்தேசத்தினர் கொண்டுவந்து கொடுக்கும் நவரத்னக்கற்களை யெல்லாம் கண

க்கப்பிள்ளை வாங்கி காயிதத்தில்மடித்து பெட்டிக்குள் வைத்துக்கொள்வதும் அந்திப்பொழுதானால் புரட்டர்களிருவரும் எடுத்துக்கொண்டு போய் பத்திரப்படுத்திக்கொள்வதுமாய் ஆறுநாளைக்குள் ஊரையே * காலிசெய்து விட்டார்கள். பணம்கொடுப்பதாகக் குறிப்பித்தநாள் மறுதினமாகையால் ஜகஜ்ஜாலப்புரட்டனும் உலகப்புரட்டனும் * பொங்கிதின்னும் சட்டிபானையை அங்கேயே போட்டுவிட்டு தெருக்கதவை தாளிட்டுக்கொண்டு பின்புரத்தின் சுவற்றை இடித்துக்கொண்டு தென்தேசத்தினர் கொடுத்த நவரத்தினக் கற்களை யெல்லாம் எடுத்து மூட்டைகட்டிக்கொண்டு அன்றிரவிற்றானே ஓடிப்போய் ஓர் ஆலவிருக்ஷத்தின்கீழ் பள்ளந்தோண்டி தமது ஆடைஆபரணங்களையும் நவரத்தினக்கற்களின்மூட்டையையும்புதைத்துவிட்டு கூத்து நெல்லுகுத்துவதற்குப்போய் அங்கிருப்பவர்களைப்பார்த்து ஐயா! யாங்கள் நாட்டுப்புறத்துக்குடியானவர்கள் இவ்வருஷம் மழையின்றியதால் பிழைப்பதற்கு வந்தோம் எங்களிருவருக்கும் ஆள்ஒன்றுக்கு அரைவிராகன் நெல்லுபோட்டால் குத்துவோமென்று பரிதாபமாய்ச் சொல்லவே, மர்மமுணராத அவர்கள் இவ்விருவரையும் பார்த்து ஐயோபாபம் இவர்களுக்கு கோவணந் தவிர வஸ்திரமில்லையே யென்று பரிதாப மடைந்து கிழிந்து அழுக்கடைந்த ஓர் பழயவஸ்திரத்தை அவ்விருவருக்கும் கொடுத்து அணிந்துக்கொள்ளச்செய்து, வயறுநிறைய கூழ்வார்த்து, குடிக்கச்செய்தானபிறகு இருவருக்கும் நெல்லை அளந்துபோட்டு விட்டார்கள், ஜெகஜ்ஜாலப்புரட்டனும் உலகப்புரட்டனும் கையில் உலக்கையை எடுத்துக்கொண்டு நெல்லுகுத்த ஆரம்பித்துக்கொண்டனர், பொழுது போனஉடனே இருவருக்கும் இரண்டுபடி அரிசிகிடைத்தது. அதனைக் கொண்டுபோய் நடுத்தெருவில் அடுப்பு மூட்டி பெரிய பானையில் போட்டு கஞ்சி தண்ணீர் சோறுய்க் காச்சி மிளகாயை சுட்டுக்கடித்துக்கொண்டு சாப்பிட்டு ஓர் திண்ணையின்மீது படுத்துக்கொண்டு ஒன்றுந்தெரியாதவர்போல சயனித்துக்கொண்டனர்.

இங்ஙனம், இவர்களுடைய மோசமோ இத்தகைய அற்புதானந்த ஆச்சரிய காக்ஷியாயிருக்கையில் பொழுது விடிந்தஉடனே வழக்கம்போல் கணக்கப்பிள்ளை மாளிகையில் வந்து ஐயா! எஜமானே! எஜமானே யென்றுகதவைதட்டி கூச்சல்போட்டனன், அச்சமயம் வாசற்படியில் காவலிருக்கும் சேகவர்களும் வந்து விட்டனர். மூவருமாய்க் கதவைத்தட்டி எஜமானே எஜமானே! எஜமனே! யென்று கூச்சலிட்டும் ஏனென்று கேழ்க்கவும் திக்கில்லாமற்போய் விடவே என்னமோ ஏதோ வென்று சும்மாயிருந்து விட்டனர், ஆளிருந்தால்தானே ஏனென்று கேழ்ப்பார் ஆசாமிகளிருவரும் மோசடியாய் ஓடிப்போய் கையில்

உலக்கையை எடுத்துக்கொண்டு நெல்லு குத்தும் வேலையை ஆரம்பஞ் செய்துக் கொண்டு திண்ணைத்தூங்கிகளாயிருப்பது யாருக்குமே தெரியாது. அன்றயதினத்தில் இரத்தினக்கற்களைக் கொடுத்தவர்கட் கெல்லாம் மொத்தத்தொகை செலுத்துகிற நாளானதினுலே யாவரும் வந்து வாசற்படியில் உட்கார்ந்துக்கொண்டு, ஏனையா கணக்கப்பிள்ளையே!யாங்கள் கொடுத்த இரத்தினக்கற்களின் மொத்தத்தொகையை செலுத்துவீரென்று கேட்டனர் யென்ன செய்வான் பாபம். பேசுவதற்கும் நாவெழாமல் ஊமையைப்போல வாய்குளிறிக்கொண்டு, ஐயோ பொழுதுவிடிந்து பத்துநாழிகையாயிற்று, இன்னமும் எஜமான் எழுந்திருக்கவில்லை யென்று கைஜாடை காட்டினன், வந்தவர்களெல்லாஞ் சும்மாயிருப்பாரோ? இலங்கையில் வானரசேனைகள் புகுந்து அதஞ் செய்வதுபோல கணக்கப்பிள்ளையையும் காவலாளிகளையும் பிடித்துக் கயிற்ருல் பிணித்துத்தூணில் கட்டிவிட்டு கதவை பெயர்த்தெறிந்து மாளிகையுட் சென்று பார்க்கையில் இரண்டு மூன்று சட்டிபானையை தவிற மற்றவை யொன்றுங்காணுமல் மதிற்சுவற்றை இடித்துக்கொண்டுபோன அடையாளத்தைக்கண்டு வயறெறிந்து ஐயையோ மோசம் போனேமே யென்று வயற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு வெளியேவந்து கணக்கப்பிள்ளையையும் காவலாளிகளையும் இழுத்துக் கொண்டு அரண்மனையிற்சென்றனர், அரசன் அதிசயித்து! மந்திரி ஈதென்ன இவர்களனைவரும் யாதுகாரணமாக சண்டையிற் பிறந்து சண்டையிலே வளர்த்த ஜகஜண்டிகளாக அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குடனே ஆளிருவரை அகஸ்மாத்தாய் அடித்திழுத்துக்கொண்டு பேய்போலிறைச்சலிட்டு வந்தனரேயென வினவினன். அருகிலிருந்த அமைச்சனும் அவ்விதமே சந்தேகமெய்தி நகரவாசிகளை வினவுதலும் அவர்களனைவரும் குய்யோ முறையோவென கூச்சலிட்டு அரண்மனை அதிரும்படியாய்ப் பலபேர் பலவிதமாய்ச் சொல்வதினுல் யாதொன்றுந் தெளிவாய்த்தெரியாமல், அரசன் பதில் சொல்வதற்கியலாமலும், அவர்களில் தலைமையானவ னொருவனைப் பேசும்படி ஆக்ஞாபித்திடினும் அவர்களனைவருங் கேளாமல் ஒரேமாதிரியாக கூச்சலிட்டுக் கொண்டு ஐயா! அரசனுகிய உமது உத்திரவென்று வெட்டியானுல் முரசறைந்ததைக்கேட்டு மோசம்போனேமென்றனர் அரசன் அதிசயித்து ஐயோ! ஈதென்ன மோசடியென்று யோசனையாயிருக்க நகரவாசிகள் அழுதுக்கொண்டு அப்பால் வந்தால் பணந்தருகிறேனென்று சொன்னுன் யாங்கள் உண்மையென்றே நம்பிக்கொண்டு வந்துவிட்டோம் இப்போது கேட்டால் எஜமான் மோசஞ்செய்து ஓடிவிட்டானென்கிறுன். மாளிகையினுள் நுழைந்துபார்த்தோம் சட்டிபானைதவிற மற்றசாமான்

கள் யாதொன்றையும் காண்கிலோம். யாங்கள் திடுக்கிட்டு ஐயோ ஆசாமிகள் மோசஞ்செய் தோடிப்போயினரோவென்று வயிறெரிந்து அந்த மாளிகை முழுதும் சுற்றிப்பார்க்கையில் பின்புறத்தின் சுவற்றை இடித்துக்கொண்டுபோயிருக்கிறார். இனி யாங்களென்ன செய்வோம்? இதற்குக் காரணகர்த்தா! இந்தக் கணக்கப்பிள்ளைதானென்று இழுத்துக்கொண்டு வந்தோமென்றனர். அரசன் ஆற்றொணு ஆச்சரியகாக்ஷியென சிரித்துத் தலையை யசைத்துக்கொண்டு அடடா! ஈதென்ன விபரீதம்? திருடனென்றால் ஒருவர் இருவரை மோசஞ்செய்வான் அவர்கள் நகரவாசிகளனைவரையும் மோசஞ்செய்து ஓடிவிட்டார்களே ஈதென்ன கண்காக்ஷி தாணியைப் பரிபாலனஞ் செய்யும் அரசன் உலகோரைக்கெடுக்க முயல்வரோ? அப்படி யானென்ன காரணத்தினால் வெட்டியானால் என்னவென்று முரசறையும்படி ஆக்ஞாபித்தேன்? அதனால் உமக்கு என்ன தீங்கு நேரிட்டதென்று வினவினன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற நகரவாசிகள் அரசனைப்பணிந்து வேந்தே! ஓர் நாள் வெட்டியான் முரசறைந்தனன். யாங்கள் என்னடா சேதியென்றோம். அதற்கு அவன் சொன்னது என்னவென்றால், ஐயா! நமது தேசத்தில் வடதேசத்தின் வர்த்தகர் வந்திருக்கின்றனர். அவர்களுக்குநவரத்னக் கற்கள் வேண்டுமாம். யாவராயினும் கொண்டுவந்து கொடுத்தால் ஒட்டிக்கிரட்டிப்பாய்கிரயங் கொடுப்பாரென்றுதண்டோராபோட்டுஇதுதான் அரசன்உத்திரவென்று சொல்லிவிட்டுப்போயினன் யாங்கள் உண்மையென்றே மதித்து எங்கள் செவி,நாசி, கைவிரல், கழுத்திலணிந்திருந்த நவரத்தின கசிதமாய் விளங்கும் ஆபரணாதிகளையெல்லாம் அழித்து, கல்வேறு பொன்வேறாய்ப் பிரித்துக் கல்லுகளையெல்லாம் இந்தப்பாவிகையில் கொடுத்தோம். யென்றழுதனர்கள் அரசன் யோசித்து இவன்கணக்கெழுதிவைத்து எவர் கண்ணுக்குந் தோற்றாமல் திருடிக்கொண்டு போவானே. இப்போதுவந்த திருடர்களோலெனின் பிரத்தியக்ஷமாய் நம்மிடத்தில் வந்து நயவஞ்சகமாய்ப்பேசி ஊராரையெல்லாம் மோசஞ்செய்தார்கள் அவர்கள் வெகு தந்திரசாலியேயாகும் அத்தகைய துஷ்டர்களை பிடிப்பதற்கு யாவராலாகுமென்று விசாரிக்கையில் அருகிலிருந்த தலையாரிகளில் வீரசிங்கன் சூரசிங்கனென்பவர் இருவருமெழுந்து சொல்லுகிறார்.

வீரசிங்கன்:—அரசே! அந்தத் திருடர்களை யானே பிடித்துக் கொண்டு வருகிறேன். என்னையன்றி மற்றவரால் அவர்களைப் பிடிக்க முடியாது.

சூரசிங்கன்:—வேந்தே! இவர் சொல்லுவதைப் பார்த்தால் எனக்கே சிரிப்புவருகிறது, இவரைத்தவிர மற்றவர் திருடனைப்பிடிக்க முடியாதென்கிறார். இவர் எத்தனையோதடவை திருடரிடம் சிக்கி அடி உதையோடு அழுதுக்கொண்டு வந்திருக்கின்றனரே. அப்படிப்பட்ட கள்ளரையெல்லாம் யான் தானே பிடித்துக்கொண்டு வந்திருக்கின்றேன். இது யாருக்கும் தெரியாதோ? இவர் மனதிற்குந் தெரியுமே மறந்தவர்போற் பாஷிக்கின்றாரே, ஈதென்ன ஆச்சரியம்.

வீரசிங்கன்:—ஐயா! திருடரைப் பிடிப்பதென்றால் அவர்களுடன் தந்திரமாய்ப் பேசி அவர்களை உயிருடனே பிடித்துக்கொண்டு வந்து தகுந்த தண்டனை விதித்தால் மற்றவர்கட்குப் பயமிருக்கும். இவர் தனது பெயருக்குரிய சேஷ்டையைப்போல சிறு பிழை புரியும் திருடரையும் சிரசை வெட்டி எடுத்துக்கொண்டு வருகிற வழக்கமாகையால் அவர்களிடம் சிக்கிய பொருள்கள் கிடைப்பதெவ்விதம்? அன்றியும், பார்த்திருக்கும்போதே இந்நகரவாசிகளிடம் எத்தனையோ இலக்ஷ வராகன் மதிப்புள்ள இரத்தினக்கற்களையெல்லாம் அபகரித்துக்கொண்டுபோன கள்ளரை கைப்பிடியாய் பிடித்துக்கொண்டுவந்து அடித்து உதைத்து மிரட்டி பயங்கரப்படுத்தினால், உற்றதை ஒளியாமல் வைத்தவிடத்தைச் சொல்லுவார்கள். அச்சமயத்தில் யாம் களவுபோன பொருளைக் கைப்பற்றிக்கொண்டு, கள்வனை தண்டித்து விடலாம், அஃதன்றி முதலாளியை உயிருடனே கொண்டுவாராமல் கொன்றுவிட்டு சவத்தைக் கொண்டுவந்தால் போனபணம் வருமா? ஆகையால் இவர்போனால் முதலுக்கு மோசமாய்விடுமேயல்லாமல் களவுபோன நவரத்னங்கள் கிடைப்பது அரிதாகுமென்றே தெரிந்துக்கொள்வீர்.

அரசன்:—ஆம்? ஆம்!! சூரசிங்கன் செய்வதெல்லாம் அபாயகரமாயிருக்கிறதன்றி, நியாயத்திற்கு சரியாயமைவதில்லை. திருடரை உயிருடன் பிடித்து வருவானாகில் அவனைப்போல சமர்த்தன் உலகில் தேடினும் கிடையாதுதான். அதற்கு யாரென்ன செய்வது அவனுடைய சுபாவம் அப்படியிருக்கிறது.

சூரசிங்கன்:—அரசே! திருடர்களைக் காணில் என்சமர்த்தென்னவெனில்ஆளை அனுமத்தாக ஆவியைப்பிரித்து அந்தகன்பதிக் கனுப்புவதுவழக்கமாயிருந்தேன் ஏனெனில் அவர்களைஉயிருடனே விட்டுவிட்டால் மறுபடியும் திருடிக்கொண்டிருப்பார்கள். ஆகையால்; வேரைப் பிடிங்கிவிட்டால் செடிமுளையாதென்னுங் கருத்தினாலிப்படிச் செய்துக்கொண்டிருந்தேன். ஆனால் இனிமேல் அவ்விதமாய்ச் செய்யமாட்டேன். திருடரைப் பிடித்துக் கைகாலைக்கட்டி இழுத்துக்கொண்டு

வந்து உங்கள் சமுகத்தில்விடுத்து, அவனை அடிமேலடியடித்து அவன் அபகரித்த பொருளையெல்லாம் வசூல் செய்துக்கொண்டு, அப்பால் அவனை எனது கரத்திற்றுங்கிய கட்கத்தினல் சித்திரவதை செய்கு வேன்.

அரசன்:—ஆம்! ஆம்!! இதுதான் தகுந்த யோசனை அப்படியே செய்வாய்,

என, சொல்லி சூரசிங்கனுக்குச் செலவுகொடுத்து அனுப்பிவிட்டனன். பேராசையால் பொருள் நஷ்ட மடைந்த நகரவாசிகளனைவரும் களவுபோன பொருள் கையில் கிடைத்த விதமாய்ச் சந்தோஷித்து இன்றையதினமே மோசக்காரன் அகப்படுவானென்று, வாய்ப் பறையடித்துக்கொண்டு உலகப்பிரளி செய்துக்கொண்டிருந்தனர் இங்ஙனம் இத்தகைய அற்புதானந்த ஆச்சரிய காக்ஷியாயிருக்கையில் ஜெகஜ்ஜாலப்புரட்டனும், உலகப்புரட்டனும் பகல் பதினைந்து நாழிகையில் பழயசாதம் புசித்துவிட்டு கையில் உலக்கையை எடுத்து நெல் லுகுத்தும்போது, குத்தக்கார ஆசாமிகளெல்லாம் கும்மாளம்போட்டுக் குதித்து அன்றையதினத்தில் நெல்லு குத்தவும் மனமில்லாமல், ஆ! ஹா!! நமது சூரசிங்கனல் மோசக்காரன் அகப்படுவான். நமது நவரத்தின கற்களெல்லாம் நமக்குக் கிடைக்குமென்று சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், அருகிலிருந்த புரட்டர்கள் கல கல வென சிரித்துக்கொண்டு அவர்களை பரிகாசமாய்ப் விசாரிப்பதாயினர்

உலகப்பரட்டன்:—ஏனையா! சிநேகிதரே எந்த மோசக்காரன் உங்களிடமிருந்த நவரத்னங்களை திருடிக்கொண்டு போயினன். திருடனென்றல், ஒருவர் இருவர் வீட்டில் திருடுவான். இத்தனைபேர் வீட்டில் என்னமாய்த் திருடிக்கொண்டு போயிருப்பான். இதன் உண்மையை யென்னவென்று நினைந்திடில் உலகஞ்சிரிக்காதா? அன்றி, உங்களுக்கே தாயினும் வெறிபிடித்துத் தலைசுற்றியாடுகிறதோ?

நெல்லுகுத்துவோர்:—அடே! நீங்கள் யாரையா! அறிவில்லாத எருமைகளாயிருக்கின்றீர். யாங்களோ! பொருளைப் பறிகொடுத்து வயறெரிந்திருக்கையில், பரிகாசஞ் செய்கிறீர்கள். சீச்சீ! வாயைமூடு

ஜகஜ்ஜாலபுரட்டன்;—ஐயா! கோபித்துக் கொள்ளாதீர். அவனென்னமோ அறியாதவன் தெரியாமற்சொன்னல் பெரியவர்களாகிய நீங்கள் விபரத்தைச் சொல்லாமல் கோபித்துக்கொள்ளுகிறீரே. சரி, போகட்டும், இத்தனைபேர் வீட்டில் திருடன் நுழைந்து, செவி, நாசியிலிருக்கும் ஆபரணத்தில் பதித்துவைத்திருக்கும் நவரத்தினக்கற்களை

மாத்திரம் பெயர்த்தெடுத்துக்கொண்டுபோகையில் நீங்களெல்லாம் ஜா க்ரதாவஸ்தையிலிருந்தீரோ, சொற்பனுவஸ்தையிலிருந்தீரோ?

உலகப்புரட்டன்:—அண்ணே! அச்சமயம்இவர்களெல்லாம் ஜா க்ரதாவஸ்தையிலிருந்தால். திருடன்இவர்கள் முன்வருவானே சொற்ப னுவஸ்தையிலிருந்தாலும் அணிந்திருக்கும் ஆபரணத்தின்கற்களைப்பெ யர்க்கும்போது விழித்துக்கொண்டு குப்யோ முறையோவென கூச் சல்போடுவார். அச்சமயம் இவர்கள் உயிரில்லா பிணம்போன்ற மரணு வஸ்தையிலிருந்தாற்போலக் காண்கிறது.

நெல்குத்தக்காரர்—என்னடா! கெட்டுப்பிழைத்த பயலே வயற்று க்குக் கஞ்சியில்லாமல் காதடைத்துக்கொண்டு வந்தபோது கூழுவார் த்து காப்பாற்றினேமே அதனுலே உனக்கு மனோகர்வம் அதிகரித்து விட்டதோ? பத்திரம் பரிகாசித்தால் உலக்கையால் இடுப்பை ஒடித்து விடுவோம்.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—ஐயா! அப்படி செய்தால் எப்படிபிழைப் பான். அறியாதவன் என்னமோ தெரியாமற் சொல்லிவிட்டான். சிறி யோர் செய்த சிறுபிழை தன்னை பெரியோராயிற் பொறுப்பது கடமை யல்லவோ? கோபித்து கொள்ளாதீர். இந்த பையனுலே பிழைக்கும் இடத்திலும் அபாயம் வரும்போற் காண்கிறதே.

என, பாசாங்கு வார்த்தை பற்பல விதமாய்ப் பாஷித்துக்கொ ண்டு தலைமேற் கையை வைத்துக்கொண்டு விசனப்படுபவன்போல அழுதுக்கொண்டிருந்தனன். உலகப்புரட்டனும் உலக்கைமீது தலை யைவைத்துக்கொண்டு முகஞ்சுளித்தவன்போல நின்றுக்கொண்டிருந் தனன். இவர்களிருக்கும் பரிதாப நிலையையும் இந்தப் புரட்டர்களின் மோச மர்மரகஸ்யத்தையும் கவனியாத நெல்குத்தும் முழுமூடர் பரி தாபமடைந்து, சீச்சீ! நீங்கள் விசனப்படாதீர். யாங்களென்னமோ கோபமாய்ச் சொல்லிவிட்டால், உங்களைக் கொன்றுபோடுவோமோ? இதைக்குறித்து நீங்கள் பயப்படாதீரென்று தைரியஞ் சொல்லிவிட்டு, அன்றையதினம் யாவரும் சந்தோஷமாயிருந்தனர். இவ்விதமாயிருக் கையில் புரட்டர்களிருவரும் சந்தோஷமுற்று இனி இந்நகரத்தில் என் னநேரிடுமோ அந்த உளவைக் கவனிப்போமென்று மிகவும் தந்திரோ பாயமாய் அவர்களைப்பார்த்து விசாரிக்கலாயினர்.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—ஐயா! அறிவிறசிறந்த தென்தேசத்தினரே! அந்த சூரசிங்கன் வெகு சமர்த்தனைப்போற் காணப்படுகின்றது. அத னுலேதான் அரசன் அவனையே அனுப்பி திருடனைப்பிடிக்கச் சொல்லி யிருக்கின்ருர். சரி! சரி! நாளையதினம் தெரியும் வேடிக்கை.

நெல்லுகுத்துவோர்:—அடடா! சூரசிங்கனென்றால் அழுதபிள்ளையும் வாய்மூடுமே! அவர் திருடரைக்கண்டால் எகிறிவிழுந்து கத்தியால் ஓரே வீசாய் வெட்டிப்போடுவதுதான் வழக்கம்.

உலகப்புரட்டன்:—ஆ! ஈதென்ன கொள்ளை எலியைக்கண்ட நாய் எகிறிவிழுந்துக் கடித்துக்கொல்லுவதுபோல, ஆசாமியை அப்போதே கொன்றுவிட்டால் அபகரித்த பொருள் கிடைப்பதெப்படி?

நெல்லுகுத்துவோர்:—பார்த்தனையா, இந்தப்பையனென்ன அதிக மனோகர்வியா யிருக்கின்றானே, இந்த சங்கதி யாராகிலும் கேட்டு சூரசிங்கனுக்குச் சொன்னால் திடீரென ஓடிவந்து துண்டுதுண்டாய் வெட்டிப்போடுவானே, அரசனுக்கு அவனென்றால் கிஞ்சிற்று பயங்கரமாகவேயிருக்கிறதெனின் ஏழைகளாகிய நாம் எம்மாத்திரம் ஈதுணராமல் அற்பர்கட் கிடங்கொடுத்தால் ஆவிக்கபாய மெய்துவதுபோற் சுத்த மூடராகிய உங்களால் கேடுவரும்போலிருக்கின்றனவே

ஜகஜ்ஜாலபுரட்டன்:—ஐயோ? என்ன செய்வேனையா? உடன்பிறந்த தம்பியாச்சுதே யென்று பார்க்கிறேனல்லாமல் இவனுடைய பைத்தியக்கார சேஷ்டை வெகு கொடியதாயிருக்கின்றன இவனாலேதான் வீட்டைத்தோற்று, நாட்டைத்தோற்று நடுத்தெருவு பரதேசியாய் என் வயற்றை வளர்க்க கையில் எடுத்துக்கொண்டேன் உலக்கையை.

என்று, கோபித்தவன்போல இரண்டுகையினாலும் மோதி உலகப்புரட்டனை நோகாமலடித்தனன். அவன் ஓயாமல் அழுதுக்கொண்டிருந்தனன். அருகிலிருப்பவர் சமாதானஞ் செய்துவிட்டனர். ஜகஜ்ஜாலப்புரட்டன், நெல்லுகுத்தும் ஆசாமிகளைப்பார்த்து ஐயா! சூரசிங்கன் திருடனைக் கொன்றுவிட்டால், அவனிடமிருக்கும் உமது நவரத்தினக் கற்க ளெவ்விதமாய்க் கிடைப்பது.

நெல்குத்துவோர்:—ஆ! அதற்கென்ன தகுந்த ஏற்பாடுதான் செய்திருக்கின்றது.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—எவ்விதமாயினும் நமது பொருள் நமக்குக் கிடைத்தாற் போதுமானது சரி! அவ்விஷயத்திற்கு என்ன யோசனை செய்திருக்கின்றனர்.

நெல்குத்துவோர்:—ஐயா! அந்த சூரசிங்கனுடைய தகப்பன் திருடரைப் பிடிப்பதற்காகவே இந்நகர்புரத்தில் வெற்றிலைபாக்குக் கடை வைத்திருக்கின்றனர். அவருடைய வழக்கம் யாதெனில் வியாபாரம் செய்வதைப்போல ஜனங்களுடன் நல்வார்த்தை யாடிக்கொண்டேயிருந்து எவர்களாயினும் திருடர்கள் வந்தால் அவர்களைத் திடீரெனப்

பிடித்துக் கையை வெட்டி விடுவதும், அச்சமயம் சூரசிங்கன் சென்று அந்த திருடர்களைக்கொன்றுபுதைத்து விடுவதுமேவழக்கமாயிருக்கின்றனர் ஆனால், இரத்தினக்கற்களை அபகரித்த மோசக்காரனைமாத்திரம் வழக்கம்போற் கையை வெட்டி அரண்மனையி லழைத்துச்சென்று அவன் அபகரித்துச்சென்ற இரத்தினங்களையெல்லாம் வசூலித்துக் கொண்டு அப்பால் அவனைச் சித்திரவதை செய்துவிடுவார்கள்.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—ஐயையோ! ஈதென்ன ஆச்சரியகரமாயிருக்கின்றனவே, சரி! சரி!! நாளைக்கே பார்க்கலாம் வேடிக்கை,

என, நெல்லைக்குத்தியானவுடனே கூலி அரிசி வாங்கிக்கொண்டு போய்க் கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டு புரட்டர்களிருவரும் சூரசிங்கனைத் தேடிக்கொண்டு போகையில், ஜகஜ்ஜால புரட்டன்மாத்திரம், மிகவும் கூர்மையான கத்தியை எவருக்குந்தெரியாமல் இடுப்பிற்சொருகிக்கொண்டு போகலாயினன். வழியிலெதிருற்ற நகர்புரத்தின் சார்பிலிருக்கும் வெற்றிலை பாக்குக்கடையண்டைபோய் இருட்டுகாலமாகையால் அங்கு ஓர்புரத்தில் ஒதுங்கிநின்று வெற்றிலைப்பாக்கு வாங்கினர்கள் அச்சமயம் உலகப்புரட்டன்பார்த்து ஏனையா செட்டியாரே இத்தனை துட்டுசம்பாதிக்கின்றீரே ஒருதுட்டு எண்ணெய்வாங்கி விளக்கேற்றலாகாதாவென்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சூரசிங்கனுடைய தந்தையாகியவர்த்தகன் சிரித்துக்கொண்டு, அடா! போடாபோ!! மூடனே! யான் துட்டுசம்பாதிப்பதற்குக் கடைவைத்திருக்க வில்லை. உங்களைப்போன்றவர்களை அடித்துப் பொருள்பறிக்கும் திருடர்களைப் பிடிப்பதற்காக கடைவைத்துக் கொண்டிருக்கின்றேன். அவர்கள்மர்மமுணராமல் வந்து வெற்றிலை பாக்கு வாங்கி தின்றுக்கொண்டிருக்கும் போதே அவர்களுடைய உளவைவிசாரித்து திடீரென திருடர்களின் வலது கையை இந்த வெட்டுக்கத்தியினால் வெட்டிப்போட்டு, அவர்களிட மிருப்பதையெல்லாம் யான் பிடுங்கிக் கொண்டபிறகு என்மகன் சூரசிங்கன் ஓடிவந்து அவர்களைச் சரியாய்கொன்று, பூமியில் புதைத்துவிட்டுப் போவானென்று சொன்னதைக் கேள்வியுற்ற ஜெகஜ்ஜாலப்புரட்டன் தலையசைத்து அப்பப்பா! இப்பேர்ப்பட்ட தேசத்திலல்லவோ திருடர்பயமில்லாதிருக்கும் மற்றதேசங்களில் வைத்தவன் மறந்தால் எடுத்தவன் கொடுக்கானென்பதுபோற் களவு புரிவதிற் சமர்த்தராயிருக்கின்றாரென சொல்லிக்கொண்டே! ஐயா! பெரியவரே கிஞ்சிற்று சுண்ணாம்பு கொடுப்பீரென்று கேட்க அந்தக் கிழவனும் மெய்தானென்று சுண்ணாம்பை எடுத்துக்கொடுப்பதற்குக் கையை நீட்டினவுடனே, ஜகஜ்ஜாலப்புரட்டன் இடுப்பிற் சொருகியிருந்த கத்தியை

எடுத்து வர்த்தகன் வலது கையைத் தாவிப்பிடித்து வெட்டி யெடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். உலகப்பிரட்டனும் சத்தமிடாமல் ஓடிவிட்டனன். கையிழந்தவன் கதறிப்பதிறி அழுதுக்கொண்டிருக்கையில், அக்கம் பக்கத்திலிருப்பவ ரனைவரும் அலறி ஓடிவந்து பார்க்கையில் சூரசிங்கனும் வந்து தந்தையே என்ன சங்கதியென்றனன், அவன் நடந்த சங்கதியெல்லாம் விபரமாகச் சொல்லிவிட்டு எனது கையை வெட்டியவன்தான் நவரத்தினக்கற்களை மோசஞ்செய்து அபகரித்துக்கொண்டு போனவனென்று நிகழ்ந்தவையனைத்தும் விபாமாய்ச் சொல்லிவிட்டனன். சூரசிங்கனுக்குக் கோபமதிகரித்து பெருமூச்சு விடுத்து, ஆ! ஹா!! தந்தையே உன்கையை வெட்டிக்கொண்டுபோன அந்தத் திருடரை உயிருடனே பிடித்துக்கொண்டுவந்து, உன் கண் முன்னே கட்டித் தோலை உரித்துக்கொண்டுபோய் அரசனிடங் கொடுக்காமற் போனால் யானென்ன சூரசிங்கனு என் முகத்திலிருப்பது மீசையாவென சப்தமிட்டுக்கொண்டு வீதி வீதியாய்த் தேடிக்கொண்டு வருகலாயினன்.

இங்ஙனம், இத்தகைய அற்புத ஆச்சரியகாக்ஷியாயிருக்கையில் புரட்டர்களிருவரும் மனதைரியத்தை விடாமல் அந்த இருட்டிற்றானே அரண்மனை யருகில்வந்து தாங்கள் வெட்டிக்கொண்டுவந்த கையை காவளாளிகளின்மீது வீசியெறிந்துவிட்டு குடுகுடுவென் றோடிப்போய் ஓர் திண்ணையின்மீது சயனித்துக்கண்ணைமூடி நித்திரைபுரிவதாயினர். கைத்துண்டு விழுந்ததைக் கண்ணுற்ற காவலாளிகள் மனமிரண்டு அடடா ஈதென்ன பேயோ! பிசாசோ! வென்றலறியோடி மறுபடியும் மனதைரியம் விடாமல் அருகில்வந்து பார்க்கவே மனிதன்கையாயிருந்தது அதனையெடுத்து ஓர்புறமாய் வைத்துவிட்டு பொழுதுவிடிந்தால் அரசன் முன்தெரிவிப்போ மென்றிருந்தனர். சூரசிங்கனனவன் அன்றிரவெல்லாம் திருடனைத் தேடித்திரிந்துங் காணாமல் மனவிசாரத்துடன் ஜகஜ்ஜாலப்புரட்டனும் உலகப்புரட்டனும் சயனித்திருக்கும் திண்ணையிற் போய் உட்கார்ந்தான்.

அச்சமயம் திண்ணையிற் சயனித்திருந்த உலகப்புரட்டன் விழித்துக்கொண்டு, இவன்யார்! அருகில் வெகு ஆடம்பரத்துடன் உட்கார்ந்துக்கொண்டு ஆலோசனைமேலே யிருக்கின்றானே யென்று தூங்குபவன்போலே பேசாமல் யிருந்தனன். தலையாரியோ வெனின் தலைமேல் கையை வைத்தழுதுக்கொண்டு, அடடா! நாம் சூரசிங்கனெனும் பெயரெடுத்துக்கொண்டு திரிவதால் பயனென்ன. இத்தனை நாளாய் எவ்வளவோ சமர்த்துடன் திருடரையெல்லாம் பிடித்துச் சித்ரவதைசெய்

தோம். இத்ததி நமது சூரத்தன்மை யொடுங்கிபதுபோ லாயிற்றே நல்லதிருக்கட்டும். இனி இதைப்பற்றி விசனப்படலாகாது. எவ்வித மாயினும் இத்தினம் திருடரைப்பிடித்துக் கொன்று நமது பகையைத் தவிர்க்கவேணுமென்றனன். அப்போது தூங்குபவன்போல விழித் திருந்த உலகப்புரட்டன் தன்மனதிற்றுனே சிரித்துக்கொண்டு இவன் தானே நம்மைப்பிடித்துச் சித்திரவதை செய்பவனென்று மனதிலெண் ணியவனாய், ஒன்றுந்தெரியாதவன்போற் புரண்டு தனது காலினால் சூர சிங்கனை, வயிற்றில் எட்டியுதைத்தனன். அந்த உதையினால் சூரசிங்கன் திண்ணையிலிருந்து இடறிவிழுந்தனன். உலகப்புரட்டன் திடீரென்றெ ழுந்து ஜெகஜ்ஜாலப்புரட்டனைத் தட்டி எழுப்பி அண்ணேன் இதோ திருடன் இதோ திருடனென்று கூச்சலிட்டனன் அவனும் சமயத்திற் குத்தகுந்த விதமாய்த் தம்பி வட்டுவப் பையை தலையின்கீழ்வைத்தேன் பாரடாவென்று தரையைத்தடவிப் பார்த்துக்கொண்டிருந்தனன் சூர சிங்கன் ஆச்சரியமடைந்து நெருப்புக்குச்சியால் தீவர்த்தியைக் கொளுத்திப்பார்த்து, அடா! ஆரடா அறிவில்லாத எருமைகளே யான் திருடரைப்பிடிக்கும் தலையாரியாச்சுதே நீங்கள் என் மனமிரளுகிறீர். உங்களிடத்தில் என்னடா இருக்கிறதென்றான், புரட்டர்களிருவரும் சூரசிங்கன் காலில்விழுந்து ஐயா! யாங்கள் கூலிநெல்குத்தி கஞ்சிகா ய்ச்சி குடித்தும் இந்தத் திண்ணையில் படுத்துக்கொள்வது வழக்கம் எங்களிடம்வெற்றிலைச்சருகு புகையிலைக் காம்புதானிருக்கும் அதனைத் திருடர் அபகரித்துக்கொண்டுபோனால் நாளையதினம் எங்களுக்கு யார் கொடுப்பார்க ளென்றுதான் கூச்சலிட்டழுதோ மென்று பாசாங்கு செய்தனர். சூரசிங்கன் சிரித்துக்கொண்டு இவர்களைப் பார்த்தால் வட தேசத்தின் மாடுகள்போற் பருத்தசரீரமா யிருக்கின்றனர். இவர்கள் நமக்குத்துணையாயிருந்தால் திருடர்களை வெகுபக்குவமாய்ப்பிடித்துக் கொள்ளலா மென்று நினைந்து அவர்களை விசாரிப்பதாயினன்.

சூரசிங்கன்:—அடா! பயலே! யான் உட்காந்திருந்தவனை நீ ஏன் உதைத்தாய்?

உலகப்புரட்டன்:—நித்திரை கலவரத்தினால் காலை நீட்டினேன் மன்னிப்பீரையா? இதோ தொட்டு கும்பிடுகிறேன்.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—என்னடா தம்பி! நீ தூக்கத்தில் கழுதை யைப்போல புரளுகின்றாயே. இவர் நல்லவரான படியினாலே தான் விட்டுவிட்டார், சில போக்கிரிகளா யிருந்தால்,

வெண்பா.

சந்தனத்தைச் சார்தருவும் தக்க மணங்கமழும்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—அந்தவனம்
தானுமந்தச் சந்தனமும் தன்னினமும் மாள்வதன்றி
தானும் கெடச் சுடுமே தான்.

என்னுந் தன்மையாய் இந்நேரம்யானும் உன்னுடனே அழ் உதைபட்டு, வட்டுவப் பையையும் போக்கடித்துக்கொண்டு கோவணாண்டியாய்ப் போகவேண்டு மல்லவோ ?

உலகப்புரட்டன்.—அண்ணேன்! நேற்றையதினம் காருநெல்லு போட்டார்கள் அதனைக்குத்தி அரிசியாக்கினதினால் எனது சரீரமெல்லாம் உளைக்கிறது, நரம்புகளெல்லாம் வலிக்கிறது, அதற்கேற்றாப்போல வயற்றுக்குங் கஞ்சிபோதாது அதனாலே புரண்டேன்.

ஜகஜ்ஜாலப்புரட்டன்:—தம்பி! என்ன செய்யலாம்? நமது தாயார் வயற்றில் யாம் பிறந்த வேளையின் பலாபலனுக்கிசைந்தவிதமாய் இருவரும் உலக்கையைக் கையிலெடுத்துக்கொண்டு நமது வழக்கப்படியே கூலிநெற்குத்தி ஜீவிக்கிறோம். இதில் காருநெல்லு, சம்பா நெல்லு, சிறுமணி நெல்லென்று பார்த்தால் ஆகுமா? எல்லாம் சமமா யெண்ணிக்கொண்டு போகவேண்டும்.

என, வட்டுவத்தை அவிழ்த்து ஒருபாக்கை எடுத்துக் கடித்துப் பாதியை வட்டுவத்தில் போட்டுக்கொண்டு பாதிபாக்கை மென்று வெற்றிலைச்சரகைப் போட்டுக்கொண்டு புகையிலைக் காம்பைக் கடித்துக்கொண்டு பரிதாபமாய்ப் பேசிக்கொண் டிருக்கையில், சூரசிங்கன் பார்த்து ஐயோ? பாபம் இவர்களுக்குச் சரியானதொழில் கிடைத்தால் நன்றாய்க் கஷ்டப்படுவார்களென நினைந்து அவர்கட்குச் சொல்வதாயினன்.

சூரசிங்கன்:—அடே நாட்டுப்புரத்தாரே நீங்கள் இந்த வூரில் தலையாரி உத்தியோகத்திலமர்ந்துக் கொள்ளுகிறீர்களா?

உலகப்புரட்டன்:—ஐயா! யாங்கள் அம்பட்டர்களல்லவே யாங்கள் தலைசிறைக்கும் தொழிலிற் பிரவேசித்தால் ஜாதியிற் சேர்க்கமாட்டார்களே, இந்த அநியாயத்திற் கென்ன செய்வது?

சூரசிங்கன்:—நீங்க ளென்ன முழுமூடராயிருக்கின்றீரே கிஞ்சிற்றும் முன்பின் ஆலோசனையில்லாமற் பேசுகின்றீரே தலையாரி யென்

ருல் திருடரைப்பிடிப்பது. அதற்காக அரண்மனையில் மாதம் மூணுவிராகன் சம்பளங்கொடுப்பார்கள். இந்த தொழில் உமக்குச் சம்மதியா? சொல்வீர்.

ஜெகஜ்ஜாலபுரட்டன்:—ஐயா! அப்படியானல் வருகிறோம். எவ்விதமாயினும் எங்களுக்குப் பசியில்லாமல் சஞ்சிவார்க்கவேண்டும்.

என்று புரட்டர்களிருவரும் சூரசிங்கன்காலில்விழுந்து பணிந்து, திருட்டுக்குப்பிடு தொண்ணூறுகும்பிடுக்கும் பஞ்சமில்லை யென்பதுபோற் பாசாங்கு வார்த்தையைப் பலவிதமாய்ப் பாஷித்துக்கொண்டிருக்கவே மர்ம்ம ரகஸ்ய முணராத சூரசிங்கன் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு நகர்புரமாய்ப் போகுந்தருணம், அங்ஙனம் நகரவாசிகள் மலமிறக்கும் கிணறு ஒன்று கட்டியிருந்ததினுல் அதனைப் புரட்டர்களிருவரும் பார்த்து ஐயா! இந்தக்கிணற்றில் ஜலமிருக்கிறதோவென்று அருகிற்சென்று, இருவரும் எட்டிப்பார்த்தனர் சூரசிங்கன் ஓடிவந்து அடா! ஆரடா மூடர்களே இது மலமிறக்கும் தொட்டியென்று சொல்வதற்குள் இரண்டு புரட்டர்களும் சூரசிங்கனைத்தூக்கி தடாரென மலக்கேணியில் போட்டுவிட்டு ஓடிப்போயினர். அவன் திகைத்துத் திப்ரமையடைந்து, எழுந்து நின்று கழுத்தளவுதூரம் மலத்தில் பதிந்து துர்நாற்றத்தின் கொடுமையைச் சகியாமல் மனவிசார மடைந்தவனுய்த் தத்தலித்து மலப்புழுக்களின் தொந்தரையால் திரேகமெல்லாம் நமைச்சலுண்டாகி சொரிகிறதற்கும் முடியாமல் அழுதுக்கொண்டிருக்கையில், அருணோதயமானவுடனே நகரவாசிகள் மலக்கேணியின்மீது வழக்கம்போல வந்து மலமிறக்கும்போது என்னடா மனிதன்குரலாயிருக்கிறதென்று திரும்பிப்பார்த்து சூரசிங்கனுகிய தலையாரியெனத்தெரிந்து யாவரும் அரண்மனையிலோடிச்சென்று, அங்கிருக்கும் உத்திபோகஸ்தர்கட் கெல்லாஞ் சொல்லிவிட்டனர், இந்த விபரீதத்தைக் கேள்வியுற்ற மந்திரி பிரதானிய ரனைவரும் ஆச்சரியமடைந்து ஓடிவந்து பார்த்து இன்னுஞ் சற்றுநேரம் தாமதித்திடில் இறந்துவிடுவான்போற் காண்கிறதென மதித்து அச்சமயமே ஓர் ஏணியை மலக்கேணியில் விடுத்துப் பிடித்துக்கொண்டு வருவாயென்றிடினும் காலை எடுக்க முடியாமல் கைகளைமாத்திரம் மேலேதூக்கினன் உடனே சில மல்லகஜெட்டிகள் பக்குவமாய் ஏணியின்மீதேறி அவன் சமீபத்திலிறங்கி கயிற்றினுல் அவனுடைய இரண்டுகைகளையும் உறுதியாய்க்கட்டி கேணியின்மீது இரும்பு சக்கரத்தைமாட்டிக் கயிற்றை அதிற்றெடுத்து யாவரும் வெளியே யிருந்தவிதமே கயிற்றை வலித்து சூரசிங்கனை இழுத்து வெளியேபோட்டு தண்ணீரால்திரேகத்தைக்

கழுவி சுத்தப்படுத்தி என்னடா சேதியென்றால் அவன் நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ச் சொல்லிவிட்டான். அதற்கேற்றாற்போல அன்றிரவு காவலாளிகளின்மீது வீழ்ந்த கைத்துண்டைக்கொண்டு வந்து பார்க்கவே அது சூரசிங்கனுடைய தகப்பன் கையாகவே இருந்ததினால் யாவரும் ஆச்சரியப்பட்டார்கள் அரசன் சற்றுயோசித்து அருகிலிருந்த அமைச்சராதியோரைப் பார்த்து சொல்வதாயினன்.

அரசன்.—அறிவிற்சிறந்த அமைச்சர்காள்! இத்தனை விபரீத சேஷ்டை புரிபவன் உண்மையான கள்வனா? யாமும் இத்தனைநாளாய் எத்தனையோ திருடரையெல்லாம் பார்த்தோம். இத்தறி வந்திருக்கும் எத்தனாகிய திருடன் வெகு மாயாவித்தையிற் சிறந்தவனாயிருக்கின்றானே. அடடா! ஈதென்ன கண்காக்ஷி, இந்த சூரசிங்கனென்றால், எத்தகைய தீரமுடைய திருடரும் இராஜாளியைக்கண்ட புறாக்களைப்போல மனமிரண்டு அகப்பட்டுக்கொண்டு அப்போதே உயிரை விடுவாரே. அப்படிப்பட்ட சூரசிங்கனையும் மலத்தில் தள்ளினான் அவனுடைய தந்தையின் கையைவெட்டி அரண்மனையின் காவலாளிகளின் மீது வீசியெறிந்தனன். இத்தகைய குரூர பயங்கரசேஷ்டைபுரியும் திருடன் நமது தேசத்தில் உயிருடனே யிருந்தால் நகரம் பாழாய்விடாதோ? இனி இதற்கு யாது யோசனை செய்வோம் சொல்வீர்.

மந்திரி:—அரசே! திருடரைப் பிடிப்பதற்காகவே தலையாரிகளை ஏற்படுத்தினோம், அவர்களையே பலவித சஞ்சலத்திற்சிக்கச் செய்து மரணதண்டனை விதிப்பவனை மற்றவரென்ன செய்வது?

வீரசிங்கன்:—மஹாப்ரபு! யாதாமொருவரும் தமது உத்தியோகத்தை யனுசரித்து, நியாயமாய்ப் பாடுபடுவாராகில் ஆண்டவன் துணை செய்வார். அஃதன்றி, ஊராருடமைக்குப் பேயாய்ப்பறந்தால் ஆண்டவன் தண்டித்து விடமாட்டாரா? அவற்றிற் கிசைந்த விதமாய், சூரசிங்கன் எங்களைப்போன்ற தலையாரியா யிருந்தும், அரண்மனை சம்பளமும் வாங்கிக்கொண்டு இன்னும் ஊராருடமைக்குப் பேயாய்ப் பறந்து, அவனுடைய தகப்பனை நகர்புரத்தில் வெற்றிலை பாக்குக் கடைவைக்கும்படியாய் திட்டஞ்செய்து அவன் வீட்டிற்றானே சயனித்திருப்பதும், திருடர்கள் யாவராயினும் ஊரார்பொருளைக் களவுபுரிந்து கொண்டு வந்தால், அவர்களைத் தந்திரமா யழைத்து நல்லவார்த்தை யாடிக்கொண்டேயிருந்து திடீரென கள்வரின் கையை வெட்டிவிட்டு அவனிடமிருக்கும் பொருளை அபகரித்துக் கொள்வதும், சூரசிங்கன் ஓடி வந்து அவர்களைச் சித்ரவதை செய்வதுமா யிருந்தான்நீங்கள் அதனைச் சரியாய் விசாரியாமலிருந்தீர்கள், அதனாலே அவர்களுக்கு அத்தகைய

அநியாயஆபத்தெய்தியது "அரசன் அன்றுகொன்றால்,தெய்வம்நின்று கொல்லும்" என்பதுபோல அவன்தான் அவ்விதமாகிய குரூரமனது டையவனா யிருந்திடினும், வல்லவனுக்கு வல்லவன் வையகத்தி லிருப் பானல்லவோ? இராவணனானவன் தனது இளம்பருவத்தில் தனது மனோகர்வத்தினால் சில துஷ்டராக்ஷதரை துணைவகித்துக் கொண்டு அஷ்டதிசையும் திக்குவிஜயம் செய்துக்கொண்டு அநேகரை அநியாய மாய்க்கொன்று சின்னாபின்னஞ் செய்து வருகையில், அந்தப்பாபமெல் லாம் அவனைச் சூழ்ந்துக்கொண்டு கிஷ்கிந்தா கானகத்தில் தபஞ்செய் திருக்கும் வாலியின்முன் இழுத்துக்கொண்டுபோய்விடவே இராவணன் முன்பின் யோசியாமல் அந்த வாலியின்முன் சண்டையிட எத்தனிக் கையில், குரங்காகிய வாலி தனதுவாலினால் ராவணனைக்கட்டி பூமியிலி ழுத்துத் திரிந்து அவனுடைய சதையெல்லாம் பூமியிற் சிதறி உதிர மயமாகும்படி செய்ததுமன்றி, அவனைத் தனது வீட்டிலழைத்துச் செ ன்று கட்டிலின் கம்பத்திற் பிணைத்து அநேக நாள்வரையினும் அன்னந் தண்ணீர் கொடுக்காமற் சித்தப்பிரம்மை யுற்றிருக்கும்படி செய்கையில், பிர்ம்மதேவன் வந்து சிறைமீட்டுக்கொண்டு போனாலல்லவோ? இவைய னைத்தும் பாபகிர்த்தியந்தானே? ஈ துணராமல்பாஷிப்பது நியாயவிரோ தமாகுமல்லவோ?

என, பகர்ந்தவையனைத்துங் கேள்வியுற்ற அரசனுக்கும் அமைச் சராதியோர்கட்கும் சந்தேகம்தீர்ந்து சரிதானென்று சம்மதித்திருந்த னர்கள். ஆனால் சூரசிங்கனுடைய தமையனாகிய பிரதானிக்குமாத்திரம் மனகொதிப்பாகவே இருந்தனவென்றாலும் தன்னாலும் அடக்கொணா கோபம் அதிகரித்து அரசனைப்பார்த்து சொல்வதாயினன்.

பிரதானி.—மாநிலப்புகலரும் கீர்த்திவாய்ந்த மகாராஜேஸ்வரா! உலகிற்ஜனித்திடினும் அறிவை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஜீவித் திடில் யாதொருவருக்கும் அஞ்சுதலின்றி கீர்த்திப்பிரகாசமா யிருக்க லாம். அஃதன்றி கொஞ்சமதியுடையவர் பகைஞர்கட்குப் பயப்படுவாரா ன்றி, ஒருபோதும் ஜெயங்கொள்ளார். யான எத்தனையோ ஜனத்திர ளில் புகுந்து சண்டைசெய்திடினும் சுத்தவீரனென்றே பெயரெடுத் திருந்தேன். அன்றி, இவர்களைப்போ லிருந்தால் முடியுமா? ஓர், திரு டனுக்கு இவ்விதமாய் மனமிரண்டு பயங்காமுடையவரா யிருக்கின் றாரே எனக்குமாத்திரம் செலவுகொடும், அந்தத் திருடனை எட்டுநாளை க்குள் பிடித்துக்கொண்டு வருகிறேன்.

அரசன்.—அப்படியானால் மெத்த சந்தோஷமேயாகும், துஷ்டத் தேளிருக்கும் வீட்டில் கஷ்ட நஷ்டங்கள் அதிகமேயாகும், அதனை

எவ்விதமாயினும் பிடித்துக்கொன்றுவிட்டு கொளுத்தினுல் விஷபயம் தீருமென்பதுபோல நமது நகரில் பலவித பயங்கரமான குரூர பயங்கர சேஷ்டையை விளைவிக்கும் கள்ளரை கைப்பிடியாய்ப் பிடிக்காமற் போனுலும், நமது சேனைகளுடனேசென்று அஸ்திரத்தினுற் கொன்றுவிட்டாலும் பீடை தொலைந்துபோகும். ஆகையினுல் உனக்கு வேண்டியசேனைகளை அழைத்துக்கொண்டு போவாய்.

என, பகர்ந்தவை வினவிய பிரதானியும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்து, அஸ்திரசஸ்திர வித்தையிற் றேர்ச்சியடைந்த சில சேனு வீரரையும், மல்லக ஜெட்டிகளையும், அவரவர்கட்குரிய ஆயுதபாணிகளாய் அழைத்துக் கொண்டு அந்நகரமுழுதும் சுற்றிக்கொண்டிருந்தனன்.

இங்ஙனம் இவர்களுடைய ஆர்பாட்டம் இத்தகைய அற்புத ஆனந்த ஆச்சரியகாக்ஷியா யிருக்கையில், ஜகஜ்ஜால புரட்டனும், உலகப் புரட்டனும் முன்னம் சூரசிங்கனை மலக்கேணியில் தள்ளிவிட்டு ஓடிய பின்னர், யாதொருவரும் காணுவிதமாய் தாங்கள் முன்னிருந்த வீட்டில்வந்து பழையபடியே நெல்லு போட்டுக்கொண்டு உலக்கையை எடுத்துக்கொண்டு குத்துவதற்கு ஆரம்பித்துக் கொண்டனர் இவ்விதமா யிருக்கையில் நெல்லு குத்துவோரெல்லாம் உலக்கையை வைத்துவிட்டு ஒருவருக்கொருவர் பாஷித்துக்கொண்டு சூரசிங்கனுக்குற்ற அபாயகரமான மரணவஸ்தையைச் சொல்லிக்கொண்டு விசனப்படுவதும், திருடர்கள் மெத்த சமர்த்தரென்று சந்தோஷிப்பதுமா யிருந்தனர். இவர்களுடைய வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்த சொந்தக்காரர்களும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தனர் அச்சமயம் ஜகஜ்ஜாலபுரட்டனும் உலகப்புரட்டனும் இனிநமது வாயை திறந்து பேசினுல் மோசமெனமதித்திடினும் கொஞ்சம் பேசிப்பார்ப்போமென்று ஆசையாய்ச்சொல்வதாயினர்.

உலக புரட்டன்:—ஐயா! தலையாரியை மோசஞ்செய்த திருடர்களிருக்கும் தேசத்தில் பிழைப்ப தெவ்விதம்?

ஜகஜ்ஜாலப்புரட்டன்:—தம்பி நமக்கென்ன நம்மிடத்திலென்னயிருக்கிறது? பொருளிருந்தால்தானே திருடர்பயம்? ஆத்மதுரோகி மஹாபாபியென வயற்றுக்கு துரோகஞ்செய்து காசுசேர்த்து வைத்திருக்கும் கர்மிகட்குதானே திருடர்பயம், மரணபயமாகும், ஈதுணராமல் நீயேன் பயப்படுகிருய்.

நெல்லுகுத்துவோர்:—என்ன வடதேசத்தின் மாடுகளே! எங்களை பரிகாசஞ்செய்கின்றீரே பத்திரம் உலக்கையாலடித்து உமது இடுப்பை ஒடித்துவிடுவோம்.

உலகப்புரட்டன்:—ஐயா! இப்படி கோபித்தால் எப்படிபிழைப்பது? அறியாதவர்கள் தெரியாமற்சொன்னோம், நீங்களே கோபித்துக்கொண்டால் யாங்களெப்படி ஜீவிப்பது?

என, பக்குவமாய்ச் சொல்லிக்கொண்டே நெல்லைகுத்திவிட்டு அந்திப்பொழுதானவுடனே கூலி அரிசி வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். பிரதானியும் திருடனைத் தேடிக்கொண்டு தெருத்தெருவா யலைவதும், உலகப்புரட்டனையும் ஜகஜ்ஜாலப்புரட்டனையும் பார்த்தாலும் இவர்களை திருடரென்பதாகவும் நினையாமலிருந்தனன். அவர்களும் பிரதானியைக் கண்டும் காணாமலிருந்தவராய் தமதுவழக்கம் போல நெல்குத்தும் தொழிலால் ஜீவித்துக்கொண்டிருந்தனர்.

18873

இங்ஙனம் இவ்விதமாயிருக்கையில் உலகப்புரட்டனும் ஜகஜ்ஜாலப்புரட்டனும் நெல்லையெல்லாம் குத்திவிட்டு கூலி அரிசி வாங்கிக்கொண்டு ஓர் பாழடைந்த சத்திரத்திற்போய்க் கஞ்சிப்பானையில் தண்ணீர் வார்த்து, அடுப்பிலேற்றி அக்கினிமூட்டி கஞ்சிதண்ணீர் பரிக்கையாய்க்காச்சிக் கொண்டிருக்கையில், ஓர் சந்நியாசியானவர் அவர்கள்முன் வந்தனர், அவ்விருவரும் அவரைப்பணிந்து, சுவாமிதமது வருகையைக்கண்ணுற்ற யாங்கள் மனோல்லாச மடைந்தோம். ஆகையால் தேவரீர் எங்களுடன் நல்விருந்தருந்தி சுகானந்தமாய் இளைப்பாறிச் செல்லவேண்டுமென்று பிரார்த்தித்தனர், இவர்களின் நற்குணத்திற் கிசைந்த உதாரத்வகுணத்தையும் தருமசிந்தையையும் கவனித்து, இன்றையபுசிப்பு இவர்களுடைய தென்றே தீர்மானித்து, அங்ஙனமே உட்கார்ந்திருந்தனர். புரட்டர்களிருவரும் அம்மஹானுக்கு முன்னதாய்கொஞ்சம் சாதமும், சுட்டமிளகாயும் ஓர் வாழயிலையிற்போட்டனர். சந்நியாசி தனக்கு அன்புடன் கிடைத்த கஞ்சியைதேவாமிர்தம்போற் புசித்து சந்தோஷித்திருக்கையில் புரட்டர்களிருவரும் அம்மஹானை ஓர் ஆருடங்கேட்டனர். அவர் தமதுஞானதிருஷ்டியால் அவர்களுடைய செய்கையனைத்தும் நினைந்து கலகலவெனசிரித்துக்கொண்டு, அப்பா! உங்களைப்பார்த்தால் மெத்தவும் யோக்கியராயிருந்திடினும் நீங்கள் செய்த மோசமோ விபரீத சேஷ்டையாயிருக்கின்றதே, ஐயோ! யானுங்கள் சோற்றைப்புசித்தவனா யிருக்கையில், நாளைய்தினம் உமக்கு நேரிடுகிற பிராணபயத்தைச் சொல்லி உம்மைத்தப்பித்துக் கொள்ளும்படி செய்

யாவிட்டால் தருமமல்லவே யென்றுவிசனமாய்ப்பாஷித்துக் கொண்டி ருந்தனர்.

அச்சமயம், புரட்டர்கள் ஆச்சரிய மடைந்து, சுவாமி! ஈதென்ன விபரீதம்: மஹான்களின் தரிசனத்தைக் கண்ணுற்றால் வெகுலாபங்கி டைக்குமென்று கல்வியிற் சிறந்த வெல்லாய ரெல்லாம் விளம்பு கின்று ரே. யாங்கள் உம்மைக்காணுமலிருந்த போதெல்லாம் விளையாட்டாகச் செய்து முடித்துவிட்டோம், தற்சமயம் உம்மைக்கண்டபோது சுகான ந்தமெய்திடாமல் கஷ்டப்படுவோ மென்றிடினும் பிராணபயமும் நேரி டுமென்று சொல்லுகின்றீரே. ஈதென்ன ஆச்சரியமென்று கேட்கலாயி னர். சந்நியாசி அவர்களைப்பார்த்து அப்பா! நற்காலமிருக்கும்வரையி னும் தப்பித்துக்கொண்டீர்கள். ஆனுல் உமக்கு ஜெயமிருக்கும் வரை யில் பயமில்லை யென்னுந்தன்மையாய்த் தப்பித்துக் கொண்டிருந்தீர்க ளானுலும் நாளையதினம் பகல் பத்து நாழிகையில் நீங்கள் நெல்குத்து மிடத்திலிருந்தால் உமதுஉளவு வெளியாய் விடும். அப்பால்உமதுவாழ் நாள் முடிந்து விட்டதென்றே தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னதைக்கேள்வியுற்ற புரட்டர்கள் பனமிரண்டு, சுவாமி! யாங்கள் இத்தனைநாளாய் எத்தனையோ வீராதி வீரரையெல்லாம் சித்தப்ரம்மை யடையும்படியாய் மிகவும்எத்தாய் ஏமாற்றி விட்டோமே. அப்படியிரு க்கஇத்தினம் நீர் சொல்வதைக்கேள்வியுற்ருல் எங்களுக்கே ஆச்சரிய மாயிருக்கின்றதேயென்றனர், சந்நியாசி சொல்லுகிறுர். ஆனுலும், உல கிற்ஜனித்த ஒவ்வொருவருக்கும் சுகதுக்கம் சமமாகவே நேரிடுமன்றி ஒருவனுக்கு சதாசுகமும் ஒருவனுக்கு சதாதுக்கமும் நேர்ந்திடாது. எத்தனையோ வீரப்ரதாப ரெல்லாம் பற்பலவித கஷ்ட நிஷ்டூர மடைந் திருக்கின்றனரே இவையனைத்தும் நீங்கள் கவனித்துணராதவர்களா கையால் ஒன்றுந்தெரியாமல் பாஷிக்கின்றீரென்று பற்பலவிதமாகிய உதாரண தொகுப்பனைத்தும் புகன்று அப்பா! முற்காலத்தில் விஜய சிங்கனென்னும் ஓர்கள்வன் தனது வாழ்நாள்வரையினும் எவ்வளவோ சாமார்த்திய மனைத்தும் புரிந்து கடைசியில் ஓர் * சிற்றூரில் களவுபுரி ந்து சிறுபயல்களிடம் அகப்பட்டு அவமான மடைந்தனனே அவனி னும் நீங்கள் சமர்த்தரோவென்றனர். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற புரட்டர்கள் அதிசயித்து சுவாமி! அந்த விஜயசிங்கனுடைய சரிதை யை யாங்கள் கவனிக்கவேண்டும் அதனை விபரமாய்ப் புகல்வீரென்று வினவினர். அம்மஹான் சொல்லதாயினர்.

---

* சிற்றூர்—சிறுகிராமம்.

வெகுவித சாமார்த்தியஞ் செய்த

# விஜயசிங்கன் சரித்திரம்.

தண்டகாரண்யத்தின் மலைச்சார்பில் வசித்திருக்கும் சில திருடர்கள் தமது தலைவனாக அதிகார கள்வன் ஒருவனை நியமிக்க வேண்டுமென்று அநேகநாளாய் யோசித்திருக்கையில், ஒவ்வொருவரும் தாம் தாமே அதிகார கள்வனாக வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் ஒவ்வொரும் கலகம் செய்துக்கொண்டிருந்தனரேயன்றி சரிப்பட்டுவரவில்லை. அவர்களில் ஓர் திருடனாகிய விஜயசிங்கன்மாத்திரம் தான்செய்யும் மோச தந்திரங்களினால் வெகுதேசத்திற் கீர்த்திப்ரகாசமாய்ப்பேரெடுத்து வருவது உலகோரறிந்த விஷயமெனினும்திருடர்கட்கும் தெள்ளிதாய்த் தெரிந்து, நம்மவர்களில் இவனே வல்லவனென தீர்மானித்து, அவனையே தமது அரசனைப்போற் பாவித்துஓர்நாள் திருடரெல்லாம், விஜயசிங்கனுக்கு அதிகார பட்டங்கொடுத்துஅந்நாளை நந்நாளாய்க் கொண்டாடினர்.

இப்படியிருக்கையில், விஜயசிங்கன், தனது சேனைகளாகிய திருட்டுப் பயல்களுக்கெல்லாம் காவிகாம்பரம் அணிந்துக்கொள்ளச் செய்து தண்டுகமண்டல முதலாகியவை யனைத்தும் கையிலெடுத்துக்கொண்டுவரச்செய்து, தான் ஓர் பெரிய மஹானைப்போல பாதகுறடணிந்துக் கொண்டு இவர்களுடனே தனக்கிஷ்டமான தேசத்தின் அரண்மனையிற் சென்று அரசனுக்கு ஆசீர்வாதம் செய்வதும், வழக்கமாயிருந்தனன். அரசனும் இராஜசமுகத்தி லிருப்பவர்களும் சந்நியாசிக்கூட்டங்கள் வந்தனவோ யென்று யோசித்திருப்பாரன்றி உண்மையே ஒருபோதுங் கவனித்திலார், அரசர்களோ வெனின் வந்தவர் மஹான்களென மரியாதை செய்து அவர்களுக்கு ஆசனமளித்து வீற்றிருக்கச்செய்து, உபசாரணை புரிந்து நல்வார்த்தை யாடிக்கொண்டிருந்து இரண்டு மூன்றுநாள் வரையினும் நல் விருந்து செய்து யாவரும் சந்தோஷமாயிருக்கையில் திருடர்களனைவரும் மாசற்ற குணத்தினர்போல அரண்மனையில் நுழைந்து, அங்கிருக்கப்பட்ட உளவுகளனைத்தும்கவனித்துக்கொண்டிருப்பதும், விஸ்வாசபூனைபோல் நயவஞ்சக தந்திரோபாயமாய் பொக்கிஷமிருக்கும் ஸ்தானத்தின் மர்ம

மெல்லாம் கவனித்துக் கொண்டிருந்து இருட்டுகாலம் வந்தால் அரசனுக்கு யாதொன்றும் மீதிவையாமல் எடுத்துக்கொண்டு போய்விடுகிறதும், மறுதினத்தில் அரசன் முதலானவர்களெல்லாம் ஆச்சரிய மடைந்து அடடா! விதிவசமே வந்தவர்களை மஹான்களென மதித்து ஏமாறலாயிற்றே அவர்கள் திருட்டுப்பயல்களா யிருந்தும் சந்நியாசி வேடம் போட்டுக்கொண்டு வந்து நம்மை ஏமாற்றி பொக்கிஷத்திலிருக்கும் திரவியத்தை யெல்லாம் அபகரித்துக்கொண்டு போயினரே யென்று விசனமடைந்து தலையாரிகளால் அவர்களைப் பிடிக்கும்படி ஆக்ஞாபித்திடில் அவர்களும் பத்துபதினைந்து நாள்வரையினும் சந்நியாசி வேஷம் புனைந்திருந்த திருடர்களின் அடையாளமனைத்தும் கவனித்தவர்களாகையால், இனி திருடரை வெகு பக்குவமாய்த் தேடிப்பிடித்துக்கொண்டு வருகிறோமென்று அரசனிடம் உத்திரவு வாங்கிக் கொண்டுபோய் நகரமுழுதும் தேடிக்கொண்டிருப்பார்கள்.

இங்ஙனம் இவர்கள்நிலை இத்தகைய அற்புத ஆச்சரிய காக்ஷியாயிருக்கையில், விஜயசிங்கன் திருடிக்கொண்டு போனவுடனே கள்வரையெல்லாம் வேஷமாற்றிக் கொள்ளும்படி செய்து திருடினவூரிற்றானே திருடிக்கொண்டிருந்தாலும் யாதொருவரும் கவனியார்கள், ஒவ்வொரு சமயத்தில் அந்நிய நாட்டுவைசியராகிய வர்த்தகவேஷம் போட்டுக்கொண்டுமிகவும்தனவந்தராகிய வர்த்தகரிடத்திற் சென்று, அவர்களிடத்தில் கொடுக்கல் வாங்கல் முதலான வியாபாரவிஷயத்தை நடத்திக்கொண்டிருந்து பக்குவமாய். அவர்களுடைய கை இருப்புகளையெல்லாம் உபாயமாய்த் தெரிந்துக் கொண்டு சமயம் வாய்த்தபோது யாதொருவருக்குந் தெரியாமல் தாங்கள் பிரவேசித்திருக்கும் வீட்டிலுள்ள ஆடை ஆபரணங்களையும் வர்த்தகரின் திரவியங்களையும் வாரி மூட்டைகட்டிக்கொண்டு ஓடிப்போவது வழக்கமா யிருப்பார். பொழுது விடிந்தால் பொருளைப் பறிகொடுத்தவர் மனமிரண்டு அரசனிடம் தெரிவித்தால்அவனும் ஆச்சரியமடைந்து அடடா! எவர்களோ நயவஞ்சகர் நமது தேசத்தைப் பாழாகச் செய்கின்றனரென்று அவர்களை தேடிப்பிடிக்க ஆக்ஞாபிப்பதும், கள்வர்களும் விஜயசிங்கன் சொற்படியே பற்பலவித வேஷங்கள் போட்டுக்கொண்டு ஊரையெல்லா மோசஞ் செய்து தனவந்தர்களை யெல்லாம் ஏழைகளாகச் செய்துக் கொண்டிருப்பதுமே தமது வழக்கமா யிருந்தனர்.

இப்படி அநேகநாளாய் நடந்துக்கொண்டு வருகையில் ஓர் நாள் விஜயசிங்கனும் அவனுடைய சேனைகளும் தாங்கள் களவுபுரியும் வே

டிக்கையை அந்நிய தீவிற்காண்பிக்க வேணுமென்றும் எண்ணத்துடன் தங்களிடமிருக்கும் திரவியங்களை யெல்லாம் எடுத்து மூட்டைகட்டிக்கொண்டு கப்பலேறி ஆழிசஞ்சாரியாய்ச் சென்று அந்நிய தீவிலிறங்கி அங்ஙனமேலர்மாளிகையை வாடகைக்குவாங்கிக்கொண்டு அதில் தமது சாமான்களையும் வைத்துக்கொண்டு தாங்களும்பகற்பொழுதனைத்தும் ஊரின் உளவுகளனைத்து விபரமாய்க் கவனிப்பதும் இராக்காலத்தில் தமது மாளிகையில் வந்திருப்பதுமா யிருப்பார்கள்.

இப்படி சிலகாலஞ் சென்ற பிறகு, அந்த தீவில் மோசஞ் செய்வதற்குச் சமயம் ஏற்படாததனுல் ஓர்நாள் அந்நகரத்தின் தோட்டத்திற் சென்று கனிவர்க்கங்களையாகிலும் திருடுவோமென்று, விஜயசிங்கன் மாத்திரம் தோட்டத்தின் வாசற்படியில் காவலிருக்கச்செய்துவிட்டியாவரும் உள் நுழைந்து விருக்ஷங்களின் மீதேறி காய் கனிகளைப்பறித்துக்கொண்டிருக்கையில், அந்தத் தோட்டக்காரனை சில தலையாரிகள் மிரட்டி பயங்கரப்படுத்தி, அடடா! யாங்கள் இந்நகரத்தின் காவலாளிகளா யிருக்கின்றோமே எங்களுக்கு உன் தோட்டத்தின் கனிவர்க்கங்களிற் கிஞ்சிற்று கொடுக்கலாகாதாவென தோட்டத்திற்குள் அழைத்து கொண்டு வருகையில், ஆவரவு பார்த்துக் கொண்டிருந்த விஜயசிங்கனுக்கும் "விநாசகாலே விபரீத புத்தி" யென்பதுபோல மனமயங்கி ஓர்வித பயங்கரம் மனதிலுண்டாகித் தனது சேனைகட்குச் சைகை செய்வதற்கும் முடியாமலும் தானும் யாதேனும் ஓர்வித தந்திரோபமாய்த் தப்பித்துக் கொள்வதற்கும் சமயம் வாய்க்காமல் தலையாரிகள் அருகில் வந்தவுடனே அப்பா! சேனைகளே ஆசாமிகள் வந்துவிட்டார் பிடிபடாமல் ஓடிப்போவீரென பெருங்கூச்சலிட்டனன்.

இவன் இவ்விதமாய்க் கூச்சலிட்டதைக் கேள்வியுற்ற தலையாரிகள் சந்தேகித்து இவனென்ன கள்வனைப்போல காண்கிறதென மதித்து, அச்சமயமே அவனைப் பிடித்துத் தங்களிடமிருக்கும் கயிற்றாற் பிணைத்துக் கட்டிக்கொண்டு மற்றவர்களையும் பிடிப்பதற்கு வந்தவுடனே அவர்களனைவரும் விருக்ஷத்திற் கொருவராய் ஏறி இலைமறைவில் ஒளிந்துக்கொண்டனர். தலையாரிகளனைவரும் அவர்களை வெகு பக்குவமாய்ப் பிடித்து இராஜசமுகத்திற் கொண்டு வந்து விடுத்தனர். அரசன் தனது இராஜநீதிக் கியன்றனவாய்க் குற்றவாளிகட் கிசைந்த தண்டனையாய்ச் சிறைச்சாலையிலிட்டு வெகுவித துன்பமடையச் செய்தனன். ஆகையால் யாதா மொருவருக்கும் ஜெயமிருக்கும் வரையி

னும் பயமில்லை, அபாயம் வருவது யாருக்குமே தெரியாது. இவை யனைத்துங் கவனியாமல் நீங்கள் பலவிதமாய் யோசிப்பது நீதியல்ல வென்று சொன்னார். இவையனைத்துங் கேள்வியுற்ற புரட்டர்கள் சந்நி யாசியைப் பணிந்து சுவாமி! இனி இதற்கு யாதுயோசனை யென்று கேட்கவே அவர் சொல்லுகிறார். அப்பா! நீங்களிருவரும் நெல்லு குத்தும் இடத்திற்றானே இருந்தால் நாளையதினம் பகல் பத்துநாழி கையில் எவ்விதமாயினும் அகப்பட்டுக்கொள்வீர்கள். ஆகையால், இனி அங்ஙனம் போகவேண்டாமென்று சொல்லிவிட்டு போயினர்.

அப்பால் புரப்பட்டர்களிருவரும் சந்நியாசிவாக்கு சரியா யமையு மென்று மனதி லெண்ணியவராய் அன்றைய இரவில் தமது வழக்கப்ப டியே ஓர் திண்ணையிற்போய் சயனித்துக்கொண்டனர். மறுதினத்தில் நெல் குத்துவதற்கும் போகாமல் வைசியரைப்போல இருவரும் வர்த் தகவேஷம் போட்டுக்கொண்டு அத்தர் புட்டிகளை யெடுத்துக்கொண்டு தாசிகளின் வீதியிற்சென்று விலை கூறிக்கொண்டு வருகையில் திருட னைப் பிடிப்பதற்காக சேனைகளுடன் நகர்சோதனைப் புரியும் பிரதானி யானவன் தான் வைத்துக்கொண்டிருக்கும் அபாஞ்சி தாசியின் வீட் டில் நுழைந்தனன். புரட்டர்களிருவரும் முன்னமே அவனுடைய மர்ம மனைத்துங் கவனித்தவராகையால், அவன் தாசிவீட்டிற்போய் உட் கார்ந்து சந்தோஷமாய் பேசிக்கொண்டிருக்கையில் அத்தர் வியாபாரி யாகிய புரட்டர்க ளிருவரும்போய் தமது சமர்த்திற் கிசைந்த தந்திர வார்த்தைக ளாடிக்கொண்டிருந்து, அத்தர்புட்டிகளை எதிரில்வைத்து இதனை வாங்கிக்கொள்வீராயின் மிகவும் நலமாயிருக்குமென்று சொன் னவுடனே வேசி நேசனாகிய பிரதானியானவன் கிஞ்சிற்றும் தயை தாக்ஷண்யம், ஈவு, இரக்கமில்லாமல் அந்த புட்டிகளையெல்லாம் வாங்கி தாசிகையில் கொடுத்துவிட்டு, பெண்ணே! இன்றிரவு பதினைந்து நாழி கையில் யான் வருகிறேன். இப்போது தாமதிக்கலாகாது, ஏனெனில் திருட ருபத்திரவம் அதிகமாயிருக்கிறது, நீயும் ஆபரணதிகளையெல் லாம் கழட்டி பெட்டியில்வைத்து பத்திரப் படுத்திவையென்று சொல் லவே தாசி ஆச்சரியபடைந்து சரசா! ஈதென்ன ஆச்சரியம் ஒருமாத காலமாய் உமது ஊரில் வஞ்சகர் மோசம் மிஞ்சிப்போய் விட்டதென கேள்வியுற்றிருக்கிறேன். அதன் காரணமென்ன விபரமாயெனக்குத் தெரிவிப்பீரென்றுகேட்க, பிரதானி சொல்வதற்கும் நேரமின்றி, நாளை யதினம் சொல்லுகிறேன் நீ உனது ஆபரணங்களைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள், திருடன் பிடிபட்டவுடனே அவனை கயிற்றால்கட்டி இழுத்துக்கொண்டுவந்து இந்தத் தூணிற் பிணைந்து அடிமேலடியடித்

தால் உற்றவையனைத்தும் விபரமாய்ச் சொல்லிவிடுவானென்று எழுந் திருக்கவே அத்தர் வியாபாரிகளாகிய புரட்டர்களும் திடீரென்றெழுந் தலனையா? கனவானே அத்தர்புட்டிகளை எடுத்துக்கொண்டீரே காசெங்கேயென்று கேட்கவே பிரதானி தனது மனோகர்வத்தினால் அவர்கள் கன்னத்திலறைந்து அடா! அறிவீனர்களே! யான் இந்நகரத்தின் பிரதானியாச்சுதே என்னையா கிரயம் கேட்கின்றீரென கழுத்தைப் பிடித்துத் தள்ளினன் அவர்கள் காசையாகிலுங்கொடு, அத்தர் புட்டிகளையாகிலுங் கொடு என்று தொடர்வழக்கிடவே தாசியானவள் கிஞ்சிற்றும் இரக்கமில்லாமல் சரசா! இவர்களைத் திருடரென்று கட்டிக் கொண்டுபோய் அரசன்முன் விடுப்பாயென்று மிரட்டினள். புரட்டர்களிருவரும் இவர்கள் மனோகர்வத்தை இராத்திரிக்கு அடக்கவேண்டுமென நினைந்து, ஐயோ பணம் போச்சுதே யென்று பொய் அழுகை அழுதுக்கொண்டு போயினர்.

அப்பால், அந்திப்பொழுதானவுடனே புரட்டர்களிருவரும் ஓர் சத்திரத்திற் சென்று வயறுநிறைய அன்னம் புசித்துவிட்டு பிரதானியைப் பார்த்தவர்களாகையால் அவனைப்போலவே வேஷம் போட்டுக் கொண்டு அத்தர் புனுகு ஜவ்வாதெனும் வாசனாதிகளை மேனியிற் பூசிக்கொண்டு யாதொருவருங் காணாவிதமாய் உலாவிக்கொண்டிருந்து, இரவு பத்துநாழிகை யானவுடனே ஜகஜ்ஜாலப்புரட்டன் மாத்திரம் தாசிவீட்டில் ஓடிவந்து அபரஞ்சி அபரஞ்சியென்று கதவைத்தட்டினன், இவன் பலவித வேஷமணிந்து பலவித குரலுமாய்ப் பேசுவதற்குச் சக்தியுடையவனாகையால் அபரஞ்சி ஓடிவந்து சரசா! ஈதென்ன ஆச்சரியமா யிருக்கின்றது பதினைந்து நாழிகையில் வருகிறேனென்று இதற்குள் வந்து விட்டீர்களேயென கேட்கையில், அடீ! போடீ! போ! திருடர்களுபத்திரவம் பெரிதாயிருக்கிறதென்று உனக்குத் தெரிவித்திருந்தும் ஆபரணங்களைக்கழட்டாமலிருக்கின்றாயே யென்று அவளிடம் சரசவார்த்தைகளாடிக் கொண்டேயிருந்து அன்றிரவில் அவளால் கொடுத்த பலகாரபக்ஷணாதிகளைப் புசித்துவிட்டு மஞ்சத்தின்மீது அவளுடன் சரசசல்லாபமாய் விளையாடி தனது ஆசைதீர்ந்தபின்பு பெண்ணே! ஆபரணங்களைக் கழட்டி பெட்டிக்குள் வைப்பாயென்று சொல்லவே அவளும் அப்படியே சம்மதித்து ஆபரணமனைத்தும் கழட்டி தங்கத் தாம்பாளத்தில்வைத்து பெட்டியில் வைப்பீரென்று சொன்னாள் ஜகஜ்ஜாலப்புரட்டன் யோசித்துபெண்ணே நமது, துறவிலிருக்கும் ஜலத்தை குடிக்கவேணுமென யான் ஆசைப்படுவதினால் நீ ஏற்றத்தின்மீதேறி

ஏற்றக்கோலை மிதிப்பாயாகில் யான் தண்ணீரைச் சாலாலெடுத்துக் குடிப்பேனென்றனன் அவளும் உண்மையை கவனியாதவளாகையால் இவனைத் தனது சரசநாயகனாகிய பிரதானிதானென்று மதித்து வஸ்திரத்தை அப்பால் அணிந்துக் கொள்ளுவோமென்று ஒரு சுற்று திரேகத்தில் போர்த்துக்கொண்டு மற்றொருசுற்று பூமியிற் புரளும்படி தொங்க விட்டுக் கொண்டு ஓய்யாரமாக ஏற்றத்தின்மீதேறினள்.

அச்சமயம், ஜெகஜ்ஜாலப்புரட்டன் அந்தவஸ்திரத்தின் முனையைப்பிடித்து நிற்க அசையாமல் ஏற்றின்காலில் கயிற்றால் பிணைத்து மற்றொருமுனை பூமியில் தாழ்ந்தவுடனே அதனைக்கிணற்றின் அருகிலிருந்த ஓர் விருக்ஷத்தின் கிளையில் கயிற்றாற் பிணைத்துக் கட்டிவிட்டனன். வஸ்திரத்தை தனது திரேகமுழுமையும்யாதொருவருக்கும் தெரியாமல் வஸ்திரத்தினால் மறைத்துக்கொண்டு அசையாம விருந்தனள். ஜகஜ்ஜாலப்புரட்டன் ஆபரணங்களையும் அத்தர் புட்டிகளையும் இன்னும்வீட்டிலுள்ள திரவியமனைத்தும் மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு அபாஞ்சி தாசியின் பழையவஸ்திரத்தை அணிந்துக்கொண்டு கதவின்சந்தில்ஒளிந்துக்கொண்டிருந்தனன். பிரதானியாளவன் பகலில் தாசிக்குச் சொன்னவிதமே சேனைகளையெல்லாம் வெகு தூலவிலிருக்கும்படி செய்துவிட்டுதான் மாத்திரம் தனிமையாய் ஓடிவந்து அபாஞ்சி! அபரஞ்சியென்று கதவைத் தட்டினன்.

கதவின் சந்தில் ஒளிந்திருந்த ஜெகஜ்ஜாலப் புரட்டன் திடீரென கதவைத்திறந்து கூவாதீர், திருடர்கள் வந்திருக்கிறாரென்று சொல்லிக்கொண்டே தனது மடியில் வைத்திருந்த சுறுக்குக்கயிற்றை அவனுக்குந் தெரியாமல் அவன் கழுத்தில் மாட்டி இரண்டு கையையும் சேர்த்துக் கட்டிவிட்டு தன்னைக்கட்டி அடிக்கிறேனென்ற கம்பத்தில் கட்டினன். பிரதானி மனமிரண்டு என்னடீகட்டுகிறாயேயென்றுசொல்லிக் கொண்டிருப்பதற்குள் இவனுடைய வேலையை நிறைவேற்றிவிட்டுத் தனது வேஷத்தைமாற்றி தெருத்திண்ணையிற் சயனித்திருந்த உலகப் புரட்டனையும் எழுப்பிக்கொண்டு பழைய வர்த்தகவேஷத்துடன் வந்து அடா! வஞ்சகநெஞ்சமைந்த பிரதானி நேற்றைபதினம் யாங்கள் அத்தர் வியாபாரிகளாய் வருகையில் காசுகொடாமல் அத்தர்புட்டிகளை அபகரித்துக்கொண்டு அடித்துத் துரத்திய காதகனே இதோபார்த்தனையா உன்னுடைய திரவியமனைத்தும் கொள்ளைகொண்டு போகிறோமென்று அவனை நன்றாய் அடித்து உதைத்து அங்ஙனமே உட்கார்ந்து

அவ்விருவரும் அங்நகரின் சத்திரத்தில் வந்ததும் நகரவாசிகள் தங்களிருவரையும் பரியாசஞ் செய்ததினல் கோபாவேசத்துடன் அங்நகரவாசிகளையெல்லாம் அவமானஞ் செய்ததும், துர்க்குணத்தினனாகிய சூரசிங்களையும், அவன் தந்தையையும் செய்த தண்டனையையும் அத்தர்வியாபாரஞ் செய்யவந்தபோது, பிரதானிசெய்த கொடுமையினல் அவனைசெய்த தண்டனையையும் விபரம் விபரமாய் இருபது கடிதத்திலெழுதி அந்த இராவிற்றானே அரண்மனையிலும் தெருக்களின் சுவற்றிலும்லொட்டிவைத்துவிட்டு இனி இத்தகையமோசஞ்செய்தால்மறுபடியும் யாங்கள் இங்நகரிற் பிரவேசித்து உங்களையெல்லாம் பஞ்சைகளாகச் செய்வோம் வஞ்சகரேயென்றும், தாங்கள் நெல்லுகுத்தியிருந்த வீட்டின் அடையாளமும்விபரமாயெழுதியும்தமதுசவிஸ்தாரமனைத்தும்லொன்றேனும் தவராமலெழுதி சுவற்றிலெல்லாம் ஒட்டிவைத்து விட்டு மறுபடியும் அபரஞ்சிதாசியின் வீட்டிற் சென்று கட்டுண்ட பிரதாணி பார்த்திருக்கும்போதே புரட்டர்களிருவரும் மனேல்லாசமாய் அபரஞ்சிதாசியின் ஆடை ஆபரணதிகளையும் பிரதானியின் ஆடை ஆபரணதிகளையும் எடுத்துக்கொண்டு ஓடிப்போய் முன்னம் தாங்கள் நவரத்னக் கற்களை புதைத்து வைத்திருக்கு மிடத்தில் கொண்டுபோய் பத்திரப்படுத்திவிட்டார்கள்.

அப்பால் அந்தப் புரட்டர்களிருவரும் இன்னமும் என்ன நடக்கிறதோ பார்க்கலாமென்று சந்நிபாசி வேஷமாய் திரிந்துக்கொண்டிருந்தனர். ஆனல்சமயோசிதமாய் யாதொருவரும்தம்மை இன்னாரென்று கவனியாத விதமான வேஷ மணிந்துக்கொண்டு இருப்பவராகையால் அந்த நகரவாசிகளுடன் தாங்களும் ஒருவராய் திரிந்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகைய அற்புதா ஆனந்த ஆச்சரிய காக்ஷியா யிருக்கையில், பொழுது விடிந்தபின் நகரவாசிக ளனைவரும் அபரஞ்சி தாசியின் வீட்டில் வந்துபார்த்து அடடா! ஈதென்ன பிரதானியே கட்டுண்டிருக்கின்றாரே யென்று கூச்சலிட, சகலரும் வந்துப் பார்க்கையில் அரசனும் மந்திரியும், சேனைவீரரும், ஆச்சரியமடைந்தவராய் வருகலாயினர். அச்சமயம் பிரதானியின் சகோதரனும், தலையாரிகளின் தலைவனுமாகிய சூரசிங்கன் கேள்வியுற்று வயறெரிந்தவனாய் அடடா! இத்தனை நாளாய் யாங்கள் எவ்வளவோ சமர்த்தராயிருந்தும், இப்போது பலவிதமாய் அவமான மடையும்படியாயிற்றே என்ன ஆச்சரியம்? அவர்கள் உண்மையான திருடரா யிருப்பார்களோ? அவ்விதமாகிய கள்வராயிருந்தால் அப்போதே அகப்பட்டுக்கொள்வார்கள்

அவர்கள் என்ன காரணத்தைக்கொண்டோ இங்கரி லிருந்துகொண் டே இத்தகைய குரூர பயங்கர சேஷ்டை யனைத்தும் செய்துக்கொண் டிருக்கின்றார்களேயென்று மனவிசார மடைந்தவனாய் தனது தமய னாகிய பிரதானி கட்டுண்டிருக்கும் ஸ்தானத்திற்சென்று பார்த்து மன விசாரமடைந்தவனா யிருந்தனன். அவனுடனே சென்றிருந்த அரசன் முதலானோரும் ஆச்சரிய மடைந்தவராய்,பிரதானிகட்டுண்டு யாதொன் றும் பேசுதற்கு மனமின்றியவனாய் தலை குனிந்துகொண்டு ஆட்டுக் கிடாவைப்போல அசைவற்றுக் கண்ணீர்விடுத்து அழுதுக்கொண் டிருந்தனன்.

அரசன், மந்திரி முதலானோர்கள் வீட்டினுள் நுழைந்து பார்க் கையில் ஏற்றத்தின் மீது ஓர் பெண்ணை வஸ்திரத்தினால் மூடி அந்த வஸ்திரத்தின் முனைகளையும் உறுதியாக பிணைத்து விருக்ஷத்தில் கட்டி யிருப்பதையும் பார்த்து ஆச்சரிய மடைந்தவராய் இந்தபெண்ணை யாம் எவ்விதமாய் பூமியிலிறக்குவது அவளுடைய போர்வையான வஸ் திரத்தின் முனையையும் இந்த விருக்ஷத்தின் கிளையில் முடிந்திருக் கின்றதே இதை அவிழ்த்தால் வஸ்திர போர்வையால் மூடப்பட்டிருக் கும் பெண் திடீரென கிணற்றில் வீழ்ந்துவிடுவாளேயென்று பலவிதமா யோசித்துக்கொண் டிருந்தனரேயன்றி, சரியான யோசனை விளங்க வில்லை. அத்தருணம் அரசன் பிரதானியின் முன்வந்து அவனுடைய கட்ட விழ்த்து தங்களுடனே அபரஞ்சியிருக்கு மிடத்தி லழைத்துச்சென்ற னர். பிரதானிதனது ஆசைநாயகியாகிய அபரஞ்சி யிருக்கும் பயங்கர நிலையைக்கண்டு மனவிசார மடைந்தவனாய், இத்தனைநாளாய் நம்மை சகலரும் மெத்த சமர்த்தனென்று புகழ்வதாயிருந்தனர். இச்சமயமோ யாதொன்றுக்கும் உதவாதவனென்று சகலரும் பரிகாசஞ் செய்வதற் காயிற்றே இனிஎவ்விதமாய் மனஞ் சகிப்பதென மனந்திகைத்து தலை குனிந்துக்கொண் டிருந்தனன்.

இங்ஙனம் இத்தகையதான ஆச்சரியகாக்ஷியா யிருக்கையில்' அங்ஙனமிருக்கும் ஜனத்திரளில் ஓர் விவேகசாலியான சிற்பசாஸ்திரி ஏற்றத்தின்மீதிருக்கும் அபரஞ்சிதாசி வஸ்திரத்தால் மூடப்பட்டு மரணபயங்கர நிலையாயிருப்பதைக்கண்டு இதற்கு எவ்விதமான யோச னையென தீர்மானித்து அரசனுக்கு சொல்வதாயினன்.

சிற்பசாஸ்திரி:—அரசே யான் ஏற்றத்தின்மீதிருக்கும் தாசியின் உயிருக்கு அபாயம் வாராமல் பூமியிலிறங்கி வரும்படியான மார்க்கத் தை யனுசரித்து எனக்கு உத்திரவுகொடுத்தால் யான் எத்தகைய தாயினும் தாசியை பூமியி லிறக்கிவிடுவேன்.

அரசன்:—ஆ! அதற்கென்ன ஆக்ஷேபனையா? நீ எவ்விதமாயினும் ஆவிக்கபாய மெய்தாமல் பூமியி லிறக்கிவிட்டால் உனக்கு வேண்டிய வெகுமதி தருவேன்.

என்று சொன்னவுடனே சிற்பசாஸ்திரியானவன் தனது சமர்த்திற் கியன்றவிதமாய் மரப்பலகையால் கிணற்றைமூடிஎற்றக்கோலுக்கு மரப்பலகையால் சாரங்கட்டி அபரஞ்சி தாசியை சாரத்தைப் பிடித்துக்கொள்ளச்செய்து விருக்ஷத்தில் பிணைந்திருந்த வஸ்திரத்தின் கயிற்றை அறுத்துவிட்டவுடனே அபரஞ்சிதாசி சாரத்தின்மார்க்கமாய் பூமியிலிறங்கிவந்தனள். அரசன் ஆச்சரிய மடைந்து சிற்பசாஸ்திரிக்கு வேண்டிய வெகுமதிகொடுத்து அனுப்பிவிட்டு, பிரதானியையும் அபரஞ்சி தாசியையும் அரண்மனையி லழைத்துச்சென்று நடந்த சவிஸ்தாரமென்னவென்று கேட்டனர். அச்சமயம் அவர்களிருவரும் சொல்வதாயினர்.

அபரஞ்சிதாசி:—அரசே! நேற்றைய தினம் பகல் இரண்டுபேர் அத்தர் வியாபாரிகள் வந்தனர். அவர்களிடம் பிரதானி அத்தர் புட்டிகளை வாங்கிக்கொண்டு அடித்துத் துரத்திவிட்டார். அந்தப் பகையினால் அவ்விருவரும் இவ்விதமாய்ச் செய்தனர். இதன் காரணம் பிரதானியைக்கேட்டால் தெரியவரும்.

அரசன்:—ஏனையா பிரதானியரே தாங்கள் திருடனை பிடிக்கச் சென்றவர் யாதுகாரணமாக தாசிவீட்டில் கட்டுப்பட லாயினீர்?

பிரதானி:—அரசே! அவ்விருவர் தான் நகரவாசிகளின் நவரத்தினங்களை நயவஞ்சகமாய் மோசஞ்செய் தெடுத்துக்கொண்டுபோன திருடர்கள். அவர்கள் என்னை இவ்விதமான குரூர பயங்கர சேஷ்டையான அபாயத்தை விளைவித்து ஓடிப்போயினர்.

என அந்த ஜெகஜ்ஜாலபுரட்டனும், உலகப்புரட்டனும் இந்நகரில் வந்ததும் இந்நகரவாசிகள் அவர்களைப் பரிகாசஞ் செய்ததினால் அவர்களுக்கு கோபம்பெருகி பற்பலவித கெடுதியனைத்தும் புரிந்ததும் தன்னை இவ்விதமான மரண பயங்கரமாய் தூணில் கட்டிவைத்துவிட்டுப் போனது வரையிலும் அவர்கள் தன்னை அடிக்கும்போது சொன்ன சொற்க ளனைத்தும் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ச்சொல்லி யழுதனன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற அரசன் முதலானோ ரனைவரும் ஆச்சரியப்பட்டு, அடடா! நமது நகரவாசிகளின் மனோகர்வத்தினால் பிராணபயம் நேரிடலாயிற்றே இவர்களுக்கு வாய்ப்பேச்சுக்கு

சமர்த்தே யல்லாமல் கைசாமார்த்தியம் கிடையாது. வந்தவர்களோ வெனின் மனிதரூபமா யிருந்தாலும் மாயராக்ஷதர் போல மனிதர் சூழும் மாநிலத்தை கானகமாகச் செய்யும். சமர்த்தமைந்த குரூர மனதமைந்த வஞ்சகராயிருக்கின்றார்களே இனி இவ்விததுன்பத்திற்கு யாவரென் செய்வதென்று மனந்திகைத்து விசனமடைந்தவரா யிருந்த னர்கள்.

வீரசிங்கன்:—அரசே! யான் உமக்கு முன்னமே சொன்னதைப் போல் தாங்க ளென்னையே அனுப்பியிருந்தால் வெகு பக்குவ மாக நேரில்வந்த திருடரை யான் கவனித்து அவர்களுடன்நேசித்துக் கொண்டிருந்து வெகு பக்குவமாய்ப் பிடித்துக் கொண்டு வருவேன். தாங்கள் என்னை நம்பாமல் சூரசிங்கனை அனுப்பினீர். அவர் தனது சமர்த்தை திருடரிடம் காண்பித்து அவர்களின் காலால் உதைபட்டு மலக்கேணியில் விழுந்து மரணபயங்கா மானார். அதன்பிறகே யாகி லும் என்னை யனுப்பாமல் பிரதானியை யனுப்பியபடியால் அவரும் அத்தர் புட்டி கொண்டுவந்த திருடனை கவனியாமல் அவனை ஓர் வியா பாரியாக மதித்து கவனியாமல் விட்டு விட்டதுமல்லாமல் அவன் அத் தர் புட்டிக்கும் விலை கொடுக்காமல் அவ்விருவரையும் அடித்துத் துர த்தியதினால் அவர்கட்குக் கோபம்பிறந்து இவர்களை இவ்விதமான கஷ்டப்படுத்தி தூணில் பிணைந்துவிட்டு அடி உதை அபிஷேகாதி யனைத்தும் புரிந்து பிராணபிக்ஷை கொடுத்துவிட்டுப் போனார்கள் இனி இவர்கள் சமர்த்தை என்னவிதமாய்ப் புகழ்வது.

சூரசிங்கன்:—(கோபித்து) அடா! வீரசிங்கா! உலகிற் பிறந்த மனிதர்களில் ஒருவர்க்கொருவர் சமர்த்தரேயன்றி தாழ்மையாய்நினைக் கப்போகுமோ? இதோபார் இன்னும் பத்துநாளைக்குள் அந்த திருட ரிருவரையும் யானே பிடித்துக்கொண்டு வருகிறேன்.

வீரசிங்கன்:—ஐயா! தாங்கள் என்மீது கோபித்துக் கொள்வதி னாற் பிரயோசனமேது? இந்த கோபத்தைத் திருடர்கள்மீது காண் பித்து இருபது நாளைக்குள்ளாக வாவது பிடித்துக்கொண்டுவந்தால் உத்தமமாயிருக்கும்.

என்று பரிகாசமாய்ச் சொன்னான். அவ்வார்த்தையைக் கேள்வி யுற்ற வீணர்களாகிய சூரசிங்கனும், அவனுடையதந்தையும் தமயனும் மஹா விசனமடைந்தவரா யிருந்தார்கள். ஆனால் எவ்விதத்திலாயினும சந்தடியில்லாமல் அந்ததிருடரைப்பிடித்து தங்களை அவ்விருவரும் அலக்ஷியமாய் மதித்து பிராணபயங்கரமான அபாயத்திற்கியன்ற அவ

மானஞ் செய்த பழிக்காக அந்த திருடரிருவரையும் எவ்விதமாயினும் பிடித்துவந்து உயிருடனே சித்திரவதை செய்யவேண்டுமென ஆலோசனை செய்திருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இத்தகைய கோபாவேசமா யிருக்கையில், ஜெகஜ்ஜால புரட்டனும், உலகபுரட்டனும் தமதுவேஷத்தைமாற்றி சந்நியாசி வேஷமாய் காவிவஸ்திர மணிந்துக்கொண்டு கையில் தண்டு கமண்டல மெடுத்துக்கொண்டு யாத்திரைக்குப் போவோரைப் போல பிரயாணமாகி, அந்நகரிற்றனே பிரவேசிப்பதும அங்கிருக்கும் தனவந்தர் வீடுகளில் அன்னம் புசிப்பதும் அருகிலிருப்பவர்களால் அரண்மனைக்குப் போவதும் உத்தியோகஸ்தருடன் சமயோசிதமாய்ப் பேசுவதும், ஆனல் தாங்கள் யாதொருவரா லும் கண்டுபிடிக்கப் படாமலிருந்தவர் களாகையால், தமக் கிஷ்டமானபடியே திரிந்துகொண் டிருப்பார்கள். இவ்விதமாயிருக்கையில் சில சமயம் இராஜசபையிற் பிரசங்கஞ் செய்வதாயிருந்தா லும் ஜெகஜ்ஜாலபுரட்டனும் வுலகபுரட்டனும் மிகவும் உத்தமகுணமமைந்த ஞானிகளைப்போல சமயோசிதமாய்ப் பேசிக்கொண்டு அந்நகரவாசிகளில் எவர்களும் தன்னை இன்னுரென்று கவனியாதவிதமாகிய தந்திரோபாயமாய்த் தப்பித்துக்கொண்டு ஊரின் உளவுகளை விசாரித்துக்கொண் டிருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் இவ்வித தந்திரமாய் திரிந்துகொண் டிருக்கையில் சூர சிங்கனுக்கும், பிரதானிக்கும் இத்தனை நாளாய் வீராதிவீர விஜயப்ரகாச தைரியசாலியெனும் பெயரமைந்திருந்தனவே இச்சமயம் இரண்டு திருடர்களால் பலவித கஷ்ட நஷ்ட மாயினவேயென சகலரும் சொல்லிக்கொண்டிருந்தனர். நகரவாசிகளோவெனின் நாம் இத்தனைநாளாய் நவரத்னமிழைத்த ஆபரணுதிகளையணிந்துக்கொண்டு அலங்கார சிங்காரமாயிருந்தும், தற்சமயம் யாதொரு ஆபரணமின்றிய கற்சிலைபோ லிருப்பதாயினேமே, இனி யாமென்ன செய்வதென விசனமாயிருந்தனர்.

ஆனல் ஜகஜ்ஜாலபுரட்டனும் உலகப்புரட்டனும் இனிமேல் யாம் இந்த நகரவாசிகளுக்குக் குருவாயிருந்து மதியுரைக்க வேண்டுமென தீர்மானித்து அடுத்த தேசத்திற்சென்று தங்களை யாதொருவரும் கவனியாதவிதமாய் தண்டு கமண்டலம் காவிவஸ்திரம் புலித்தோல், மான்தோல் கஞ்சா, கஞ்சாதம்மிழுக்கும் சிமிளி முதலானவை யனைத்தும் கிரயத்திற்கு வாங்கிக்கொண்டு அதிகாலையில் ஓர் அம்பட்டன்கையில் இரண்டுபணம் கொடுத்து இருவரும் தலைசிரைத்து மொட்டையடித்துக்கொண்டு ஆற்றிற்சென்று ஸ்நானஞ்செய்துவிட்டு காவிகாம்பா

தண்டுகமண்டல தாரியாய் கவசகுண்டலத்தை காதி லணிந்துக் கொண்டு ஜகஜ்ஜால புரட்டன் குருவாகவும்! உலகப்புரட்டன் சிஷ்ய னுகவும் வேஷ மணிந்துக்கொண்டு வருகையில், சில வறுமையாள ராகிய யாசகர் பசியினுல் மெலிந்திருப்பதைப்பார்த்து பரிதாபமடைந்த வர்களாய், அவர்களுக்கெல்லாம் அப்பட்டர்களால் மொட்டை யடிக் கச்செய்து அவர்களுக்கும் காவி வஸ்திரங்கொடுத்து அணிந்து கொள்ளச்செய்து சந்நியாசி கூட்டமென்று காண்போர் அதிசயிக்கும் படியாய் தாங்கள் முன்பு மோசஞ்செய்திருந்த தேசத்திலிருக்கும் ஓர் தோட்டத்திற்சென்று ரிஷி ஆசிரமம்போல மடமொன்று ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

அந்நகரவாசிகள் கண்ணுற்று யாவரோ மஹான் தமது சிஷ்ய வர்க்கத்துடனே வந்திருக்கின்ருரென்று பயபக்தி விஸ்வாசத்துடனே தினந்தோறும் மடத்திற்கு வருவதும், குருவைப்போல வேஷ மணிந் திருக்கும், ஜெகஜ்ஜாலபுரட்டன் காலில் விழுந்து பணிந்து சுவாமி எங்களுக்கு நன்மார்க்கத் தியல்பினை போதிக்க வேண்டுமென்று கேட் பார்கள்.

இங்ஙனம் இவ்விததாய் ஜெகஜ்ஜாலப்புரட்டன் குருவாகவும், உலகப்புரட்டன் சிஷ்யனுகவும் வறுமையாள ரனைவரும் சந்நியாசி கூட் டமாகவும் பொய்வேஷதாரியாயிருந்தனர். இவர்களுடைய மர்மரகஸ்ய முணராத அந்நகரவாசிகளனை வரும் தினந்தோறும் மடத்திற்கு வரு வதும், உலகபுரட்டன் அவர்களின் முன்பாக ஜகஜ்ஜாலபுரட்டனை நமஸ்கரிப்பதும், அவன் ஆசீர்வதிப்பதும், யாசகராகிய சந்நியாசி வேஷதாரிகளாயிருக்கும் வறுமையாளர் சோறுகண்டவிடமே சொர்க் கலோக மெனமதித்து, மடத்தில் சூழ்ந்திருப்பதையும் பார்த்து இம் மஹான் மிகவும்பெரியவர் இவருடைய அனுக்கிரக மிருந்தால் நமக்கு அதிர்ஷ்ட முண்டாகுமென்று அடிக்கடி ஜெகஜ்ஜாலபுரட்டன் காலில் விழுந்துபணிவதும், அவன் சுகீபவாவென்று ஆசீர்வதிப்பது மாயி ருந்தனன்.

உலகப்புரட்டன்:—ஐயா ! நகரவாசிகளே ! இம்மஹானுபாவர் மஹாஞானி யாகும். இவரைக்காண. வருபவர்கள் தக்ஷணைகொண்டு வரவேண்டும்.

நகரவாசிகள்:—சுவாமி ! இவர்பக்ஷண மென்ன?

உலகப்புரட்டன்:—ஆ! இவரென்ன நம்மைப்போன்றவரா? இவர் பாலும் பழமும் சாப்பிடுவார். அன்ன பதார்த்தம் சாப்பிடமாட்டார்

வேண்டியவர்கள் யாதேனும் கொண்டுவந்து கொடுத்தால் மஹாதர்ம வான்கள் தான்.

நகரவாசிகள்:—ஆ! அப்படியானல், இவருக்கு காசுமீது விருப்ப மில்லையே தக்ஷணையென்னத்திற்கு?

உலகபுரட்டன்:—இதோ! பார்த்தீரா? இவரைச்சூழ்ந்திருக்கும் இத்தனை சந்நியாசி கூட்டங்களுக்கும் பசிதணியவேண்டும்.

என! தந்திரோபாயமாய்ச் சொல்லிகொண்டிருப்பான். நகரவா சிகளும் உண்மை தானென்று யெண்ணிக்கொண்டு ஒவ்வொருவரும் பால்பழம் தக்ஷணை முதலானவையும் கொண்டுவந்து உலகப்புரட்டன் கையில் கொடுத்துவிட்டு ஜகஜ்ஜாலபுரட்டனை நமஸ்கரித்துவிட்டுப் போவார்கள்.

இங்ஙனம் இவ்விதமாயிருக்கையில் தென்தேசத்தினர் முன்னம் ஜெகஜ்ஜாலபுரட்டனையும் உலகப்புரட்டனையும் வடதேசத்தினரென் றும், அவர்கள் சோற்றுக்குக் கேடும் பூமிக்கு பாரமுமாய்ப் பிறந்தவர் களென்றும், அவர்களிடம் ஆபரணக் கற்களைக்கொடுத்து அவர்களிட மிருக்கும் திரவியங்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டு ஓட்டாண்டி யாக்கி வேடிக்கை பார்ப்போமெனுந் துர்க்குணத்தைத் துணைவகித் திருந்ததினால் தங்களிடமிருக்கும் ஆபரணங்களை யெல்லாம் தட்டா னிடத்திற்கொடுத்துக் கல்வேறு பொன் வேறாகப் பெயர்த்து கற்களை யெல்லாம் கடிதத்தில் மடித்து முன்னமே கொடுத்துவிட்டு வயற்றுப் பசியால்களைத்திளைத்த வறுமையாளரைப் போல வயறெரிந்திருக்கை யில், மீதியாயிருந்த வெள்ளி, பொன் முதலானவையும் செலவுசெய்து ஒழித்துவிட்டு ஓட்டாண்டியாக்குவதற்காகவந்திருக்கும் ஜகஜ்ஜாலபுர ட்டனையும் உலகப்புரட்டனையும் உண்மையானமஹான்களெனமதித்து, தங்களிடமிருக்கும், வெள்ளி, பொன்களை யெல்லாம் விற்கிரயஞ்செ ய்து அந்த திரவியத்தையும் கொண்டுவந்து சிஷ்யவேடமாயிருக்கும் உலகப்புரட்டன் கையில் கொடுத்துவிட்டு நமஸ்காரஞ்செய்துவிட்டு போவார்கள்,

இவர்கள் கொடுக்கும் திரவியத்தை யெல்லாம் உலகப்புரட்டனும் அவனைச்சேர்ந்த பொய்வேஷ சந்நியாசிகளும் சேர்ந்து செலவுசெய்து அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜன, பால், பழவகைகளு டன் புசித்து பசியாறிக்கொண்டிருப்பார்கள், ஜெகஜ்ஜாலபுரட்டனும் உலகப்புரட்டனை பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டு பொய்ச்சந்நி

யாசிகளை சுற்றிலும் சூழ்ந்திருக்கும்படி செய்து தான் மஹா பிரசங்கியைப்போல நீதிசாஸ்திர பிரசங்கஞ் செய்துக்கொண்டிருப்பதுமே தனக்குரிய வழக்கமாகையால் நகரவாசிகளனைவரும் தினந்தோறும் வந்து பிரசங்கங்கேட்டு மனமகிழ்ந்தவராய்த் தங்களிடமிருக்கும் திரவிய மனைத்தும் ஜகஜ்ஜால புரட்டனுக்குப் பாத காணிக்கையாய்க் கொடுத்து நமஸ்கரித்துக் கொண்டுபோவார்கள்.

இங்ஙனம் இவ்விதமாகிய ஜகஜ்ஜாலமாய மயக்க உலகப்புரட்டின் வேடிக்கையாயிருக்கையில் திருடனைப்பிடிப்பதற்கு புறப்பட்ட பிரதானியும் சூரசிங்கனும் தங்களாலானவை வரையினும் திருடரைத் தேடினும் அகப்படாமையால் அரசனுக்குத் தெரிவித்துவிட்டு மௌனமாயிருந்துவிட்டனர், அரசன் அதிகமனவருத்த மடைந்தவனாய் இனி யாமென்ன செய்வது? அந்த மோசக்காரர்களாகிய திருடர்கள் நமது நகரவாசிகளின் பகைவகித்துக்கொண்டு பலவிதமாகிய துன்பஞ்செய்கின்றார்களே அவர்களை பிடிப்பதெவ்விதம்? அன்றியும் சும்மாயிருந்தாலும் அவர்களால் இன்னுமென்னென்ன நேரிடுமோ? வென்று மனவிசாரமாயிருந்தனன்.

அரசன் நினைவு இத்தகைய சஞ்சலமாயிருக்கையில் நகரவாசிகள் கோழிபோனதுமல்லாமல் குரலும் போனது பொருளும் போனதென்னும் தன்மையாய், ஆபரணங்களிலிருந்த கற்களும் போய் அதனால் மனோகர்வமும் போய் மீதியாயிருந்த பொன் வெள்ளியனைத்தும் விற்கிரயஞ்செய்து உலகப்புரட்டனிடம் கொடுத்துவிட்டு ஜகஜ்ஜாலப்புரட்டனுடைய நீதிசாஸ்திர பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

இவ்விதமாயிருக்கையில் அரசனுடைய தாசியாகிய அழகு வல்லியின் குமாரத்தியாகிய ஞானவல்லியென்னும் பெண்பருவதிசையடைந்திருந்தனள். அந்தப் பெண்ணை விவாகஞ்செய்துக் கொள்வதற்காக அநேக தனவந்தர் வீட்டுப் பிள்ளைகளெல்லாம் தங்களை இனத்திற் சேர்க்காவிட்டாலும் பெரிதல்ல வென்று தாய்தந்தையரையும் வெறுத்து ஞானவல்லியிருக்கும் கன்னியாமடத்தில் வருவதும் போவதுமா யிருப்பார்கள். சிலசமயம் இராஜனுக்கும் காணிக்கைகொடுத்து தமது இஷ்டத்தை தெரிவித்து ஞானவல்லியை யாங்கள் மணஞ்செய்துக்கொள்ள தயை புரிவீரென்றும் பரிதாபமாய் வேண்டிக்கொள்வதுமாயிருப்பார்கள். ஆனால் ஞானவல்லிக்குமாத்திரம் எவர்மீதும் இஷ்டமில்லாமல் தான் சதா ஞானானந்தமாய் பகவத் பக்தியாயிருப்பது

தனக்குரியவழக்கமாயிருந்தனள். அரசனுக்கு மாத்திரம் ஞானவல்லி யின் ஞானனந்த பகவத் பக்தியானந்தத்தின் மீது மிகவும் அன்பா யிருந்தனன். இவ்விதமாயிருக்கையில் ஞானவல்லி ஓர் நாள் தனது பாங்கியருடனே நந்தவனத்திற்சென்று பூங்காவனத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில், புரட்டர்களிருக்கும் மடாலயத் தைக்கண்டு, அங்ஙனம் வந்து மஹா ஞானபிரசங்கஞ் செய்யும் ஜெகஜ் ஜாலபுரட்டன் பாதத்தில் விழுந்து சுவாமி நமஸ்கார மென்று பணிந் தனள், அவன் உண்மையான ஞானியா யிருந்தால்தானே நற்குண மிருக்கும், பொய்வேஷமணிந்த புரட்டனுகையால் ஞானவல்லியைக் கண்ட வுடனே தனது மனமயங்கி அடடா! இத்தகைய சுந்தரம் அழகு அமைந்த கன்னியை கலியாணஞ் செய்துக்கொண்டால்தான் நலமென்று மனதிலெண்ணி சுகிபவா! மணாளன் மைந்தருடன் மகிழ் வாய் வாழக்கடவையென்று ஆசீர்வதித்தனன்.

ஞானவல்லி:—சுவாமி! உலகிற்பிறந்தவர்களுக் குரிய செய்கை யாதெனின்.

### அறுசீரடியாசிரிய விருத்தம்.

நிஷ்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்கள்
நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெருமளவும் பெரியசுகம்
கிடைக்கும் மாந்தர்
இஷ்டமதாய்த்தமருமை மக்களுக் மணம் பேசி
விரும்பித் தாலிக்
கட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடத்துமட்டும்
கவலைதானே.

என்னுந்தன்மையாய் மணம்புரிந்து கொண்டவர்கட்கு மரணகா லம்வரையினும் மனசஞ்சல மென்றும், மணமின்றியிருந்தால் சதாபக வத்பக்தியானந்தமாய் யாதொரு பழிபாபமுமின்றி ஜனனமரண பசி தாக நித்திரையின்றி யிருப்பதற்காகுமென்றும் ஞானிகள் சொல்கின் றார்களே! இவையனைத்தும் கேள்வியுற்ற யான் அஞ்ஞான மார்க்கத்தை அனுசரிப்பேனோ?

ஜெகஜ்ஜாலபுரட்டன்:—(புந்நகை புரிந்து) நீசொல்வது நீதிக்கு விரோதமாயிருக்கின்றது அஃதேதெனில் ஸ்திரீகளில்சிலர்முன்ஜனன த்தில், அநியாயத்தைத் துணை வகித்து அநேகவிதமாகிய பாபஞ்செய் துக்கொண்டிருந்தால் மறுஜனனத்தில் வறுமையாளர் வயற்றில்பிறந்து

துர்க்குணமிகுந்த கள்குடியரை கலியாணஞ்செய்துக் கொண்டால் அவர்கள் மனோகர்வத்தினால் மனையாளை மாடுபோற் கவனித்து அடித்து உதைத்து மாணத்திற்குச்சரியான கஷ்டப்படுத்துவார்கள். அப்போது அந்தப் பெண்கள் வயறெறிந்து ஐயோ,

## கட்டளைக் கலித்துறை.

கைப்பிடிநாயகன் கள்ளுசாராயங் கலந்தடித்துக்
கொப்பெனச்சீறி எங்கேடீ சோறெனக் கொதித்தெழும்பி
தப்புதிப்பென்று போட் டுதைத்தாலிந்த தரணியிலே
எப்படித்தான் பிழைப்போம் இறைவா கச்சியேகம்பனே

என்று மனவிசார மாயிருப்பார்கள். அவர்களுக்குதான் சதாசஞ்சலமாயிருக்கும், முன்ஜனனத்தில் தான தர்ம பரோபகாரஞ்செய்து இராஜகுமாரத்தியாய்ப் பிறந்து சதாபகவத் பக்தியுடனே ஞானானந்தமாய்விளங்குபவர்கள் மஹான்களை மணம் புரிந்து மாநிலத்தில் வாழ்ந்திருந்தால் இகத்தில் கீர்த்தியும் பரத்தில் முக்தியுமடைவதற்காகும், ஆகையால், நீசுத்தஞானானந்தமாயிருக்கும் ஓர்மஹானை மணம்புரிந்து சுகானந்த மாயிருந்தால் நலமாயிருக்குமென்று சொன்னதினால் ஞானவல்லியும் சுவாமி தமது ஆசீர்வாதத்தின் படியே ஆனாலும் உத்தமமென்று தனது பாங்கியருடனே அரண்மனையிற்போய் தனது தந்தையாகிய அரசன் முன்சென்று தந்தையே யான் நமது நந்தவனத்திலிருக்கு மஹானையே மணப்புரிந்துவேனென்று சொன்னாள். அரசன்யோசித்து, அம்மணி அவர் சம்மதிப்பாரோ வென்று சந்தேகமாயிருக்கின்றதேயென தனது மந்திரி பிரதானியுடனே மடத்தில் வந்து ஜஜ்ஜாலபுரட்டனை பணிந்து, சுவாமி நமஸ்கார மென்று மிகவும் பயபக்தி விஸ்வாசத்துடனே கரங்குவித்தெதிர்நின்று தாங்களெனது குமாரத்தியை மணம் புரிந்துக் கொள்வீரென்றனன்.

ஜெகஜ்ஜாலபுரட்டன்:—(கலகலென சிரித்து) சபாஷ் அரசனே அற்பசுகத்திற் கிச்சித்து ஆவி இழந்த காரணம்போல உமது குமாரத்தியை யான் கலியாணஞ் செய்துக்கொண்டால், உமது சுத்திக்கு கஜத்தைக் கொடுத்துவிடவா? போதும் போதும் உமது நேயம்!

அரசன்:—சுவாமி! அவ்விதமாய் நினையாதீர். மஹான்கள் தரிசனம் பாபவிமோசனமென் றிருக்கின்றதே வேதசாஸ்திர இயல்பு. அவ்விதமிருக்க தாங்கள் என்னகுற்றம் செய்வீர். யான் எவ்விதமாய் உண்மைக் கொல்வது? தாங்கள் அவ்விதமாய் நினையாதீர்.

ஜகஜ்ஜாலபுரட்டன்:—அரசே! யானும் எனது சிஷ்யனும் நகரவாசிகளை அலக்ஷியமாகவே மதித்து யாதேனும் சொல்லுவோம், அச்சமயம், 'அது குற்றம், இது குற்றமென்று எங்களைவெட்டிப்போட்டா லென்னசெய்வது?

அரசன்:—சுவாமி! தாங்கள் இந்த நகரவாசிகளை யாகிலும், மற்றெவர்களையாகிலும், என்னையாகிலும் என்னசெய்தாலும் யான் அவைகளை குற்றமாகவும் நினையோம். தாங்களெனது குமாரத்தியை திருமணம் புரிந்தால் எங்க ளனைவருக்கும் பெருமையாகும்.

என! புகன்று இவர்களோ மஹான்கள் இவர்களால் நமக்குநன்மையே யாகுமென்று மதித்திருந்தனன். ஜகஜ்ஜாலபுரட்டனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்துக்கொண்டதினால் அரசன் அரண்மனை சோதிடனை வரவழைத்து ஓர் சுபமுகூர்த்த மேற்படுத்தி ஜகஜ்ஜாலபுரட்டனுக்கு ஞானவல்லியையும், உலகப்புரட்டனுக்கு தாதிப்பெண்ணாகிய ரூபசுந்தரியை கலியாணஞ் செய்துகொடுத்து அவ்விருவரையும் தனது இரண்டு நேத்திரங்களைப்போலப் பார்த்துக்கொண்டிருந்தனன்.

அப்பால், ஜகஜ்ஜாலப்புரட்டனும், ஞானவல்லியும் உலகப்புரட்டனும் ரூபசுந்தரியும் மனோல்லாசமாய் வாழ்ந்துகொண்டிருந்தனர். இவ்விதமாய் இரண்டுமூன்று மாதமானபிறகு தங்களால் நியமித்த சந்நியாசி கூட்டங்களுக்கு ஓர் அன்னசத்திர மேற்படுத்திவிட்டு, தாங்கள் இராஜனைப்போல ஆடை ஆபரண மணிந்துக்கொண்டு மனோல்லாசமாய் தமது மனைவிகளுடனே சுகமாய் வாழ்ந்திருந்தனர்.

இவ்விதமாய்ச் சிலகாலம் சென்ற பிறகு ஓர்நாள் ஜகஜ்ஜாலபுரட்டனும் புதைத்து வைத்திருந்த நவரத்ன கற்களையும், ஆடை ஆபரணங்களையும் எடுத்துக்கொண்டு அரண்மனையில்வந்து அரசனால் நகரவாசிகளையெல்லாம் வரவழைக்கும்படியாய்ச் சொன்னார்கள். அரசனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து நந்தவனத்தில் விஸ்தீரணமான பந்தலிட்டு நகரவாசிக ளனைவரையும் வரும்படியாய் ஆஞ்ஞாபித்தனன். அரசன் உத்திரவின்படியே சகலரும் வந்தனர். அச்சமயம், ஜகஜ்ஜாலபுரட்டனும், உலகப்புரட்டனும் நவரத்னபெட்டியை எடுத்து அரசனிடம்கொடுத்து அரசே! யாங்கள் இருப்பது வடதேசம் இந்நகரில் ஜீவிக்கவந்த எங்களை இவர்கள் அலக்ஷியமாய் மதித்து பரிகாசித்ததினால் எமது சமர்த்தை சகலரும் கவனித்து இனிமேல் இவர்கள் யாதொருவரையும் அலக்ஷியஞ் செய்யமாட்டார்களென இவ்விதமான சாமார்த்தியஞ் செய்தோம். இந்தக் கற்களின் முடிப்புகளை இவை

களின் சொந்தக்காரர்களுக்கு அடையாளத்துடன் கொடுத்துவிடுவீர். ஆனல், மனோகர்வத்திற் சிறந்து என்னல் பலவிதமாய் அவமான மடைந்து துஷ்டர்களாகிய சூரசேனனையும், பிரதானியையும் ஊரை விட்டுத் துரத்திவிட வேண்டுமென்றும் தான் சுயதேசத்தை விடுத்து தென்தேசத்தில் ஜீவிக்க வந்ததும் நகரவாசிகள் பரிகாசஞ்செய்ததும் நவரத்ன கற்களை அபகரித்துக்கொண்டு போனதும் நெல்குத்துந்தொழிலி லமர்ந்ததும், தலையாரி தந்தையின் கையை வெட்டியதும் சூரசேனனை மலக்கேணியில் தள்ளியதும் பிரதானியிடம் அத்தாபுட்டி கொடுத்தும், அவன் கிரயங்கொடுக்காமல் அடித்துத் துரத்தியதும், அவனை தூணில்கட்டி அடித்ததும், தாங்களிருவரும் குருசிஷ்ய வேஷமாகி யாசகரை சந்நியாசி கூட்டமாகச்செய்து இந்நகரவாசிகளுக்கு குருவாயிருந்து நீதிசாஸ்திர பிரசங்கஞ் செய்துகொண்டிருந்ததும் அரசனல் கலியாணஞ் செய்துக்கொண்டு காசினியோர் புகழ்ந்துரைக்கும்படியாய்ப் பெருமையாய் வாழ்ந்திருக்கும் வரையிலும் விபரமாய்ப் புகன்றனன், அரசன் முதலானோர் ஆச்சரியமடைந்து வயறு குலுங்கும்படியாய் சிரித்து மனோல்லாசமா யிருந்தனர்.

அப்பால் அரசன் ஜகஜ்ஜாலபுரட்டன் உத்திரவின்படியே நகரவாசிகளின் ஆபரணங்களின் நவரத்னக்கற்களை அவரவர் பெயரெழுதிய சீட்டின் விபரப்படியே கொடுத்துவிட்டு சூரசேனனையும், பிரதானியையும் அவர்கள் செய்த அநியாயத்தினல் ஆபத்தடைந்தாரென மதித்து அவர்களை கானகமார்க்கமாய் ஓடிவிடும்படி துரத்திவிட்டு, இனிமேல் நமது நகரில் யாதொருவரும், வஞ்சகம், மோசம, பொருமை,மனோகர்வம் முதலாகிய துர்க்குணத்தை யெல்லாம் வெருத்து நற்குணசாலிகளா யிருக்கவேண்டுமென ஆக்ஞாபித்தனன் நகரவாசிகளும் அரசன் உத்திரவின்படியே நன்மன தமைந்தவர்களாய் சதா பகவத்பக்தி யானந்தபாய் மனைவி மைந்தருடன் சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

சுபம்! சுபம்!! சுபம்!!

ஜகஜ்ஜாலப் புரட்டன் கதை

சம்பூரணம்.

---

கதாபரிகாசம்! சர்வ விகடமயம்!! சதாசந்தோஷம்!!

## தெள்ளியசிங்கம் மஹாபூலோக விகடனென்னும்

# கலியுக விகடன்

இம்மகுடம் புனைந்த நூலில் பார்சி, கும்மி, சிந்து, ஜாவளி, கிளைக்கதை, த்ழமொழிகள், விடிகதை, பலவும் சேர்ந்துள்ளன (பழுத்த கிழமானாலும்கொழுத்த நகைப்பையடைவர்) படித்தவர் இன்னும் படிக்க வியப்பர்யாமே புகழ்வது பற்புகழ்ச்சி, இது போன்ற விகடகதை எத்தனை படித்தாலும் பழங்கதை என்றே சொல்லி இதை பலமுறையும் படிக்கப்படிக்க திகட்டாத செந்தமிழ் விகடனுவல் என்று சொல்லக் கூடியதாகும்.

இதன் விலை அணு 3. | கிளேஸ் கடிதம் அணு 5.

வி. பி. சார்ஜ் 0 2 0

## தாசியால் மோசம்போன

# சந்திரசேகரன் கதை.

இதனுல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில், எல்லாப் பிறப்பினும் சிறந்த மானிடப்பிறப்பில் உற்பவித்த நாம் ஒவ்வொருவரும் நம்முடைய புத்தியை வேறிடம் புகட்டாமல் இருக்கும்படி இந்தநூதன விசித்திர சந்திரசேகரன் கதையை முதல் இரண்டுபக்கம் வாசிக்க இன்பந்தரும். இக்கதையை வாசிக்காமல் நிருத்த மனமிராது இப்புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது அவசியம் இக்கதையை முதலிருந்து கடைசிவரையில் வாசித்தவர்கள் சம்பன்னராவார்கள். இதன் விலை அணு 4.

---

# தண்டசோத்து தடிராமன் கதை.

## இதன் விலை அணு 4-தான்.

வி. பி. ஜார்ஜ் அணு 2.

தயவுசெய்து இதை படித்துவிட்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் காண்பிக்கவும்.

## படிக்கத்தகுந்த புஸ்தக மிதுவே யென்றால் மற்றென்ன சொல்லப் போகிறேன்.

# பணத்தால் வந்தபழி.

## இனிமையான செந்தமிழ் நாவல் ஓர் பி. எ பட்டதாரியால் எழுதப்பட்டது.

விலை அணு 0—8—0 | தபால் சார்ஜ் அணு 0—2—0

இது ஓர் பெரிய விஷயம் யாவராலும் நன்குமதிக்கப் பெற்றது அநேக பத்திராதிபர்களின் அபிப்பிராயத்தை சொல்லத்தரமல்ல இனிமையான செந்தமிழ் நாவலிதுவே ஓர் பி. எ. அவர்களால் எழுதப்பட்டது. பெரியயிடத்தைப்பார்த்து பெண்கொள்ள விரும்புகிறவர்களுக்கும் தகப்பன்சாமிகளுக்கும் தறிதலை தம்பிமார்களுக்கும் கொண்டகணவனுக்கு துரோகம் நினைந்து ரெண்டகம் செய்தோர்களுக்கும் எச்சரிக்கையாயிருக்கும்படி புத்தி புகட்டும் அநேக நீதி நிறைந்த நூலை யாவரும் வாங்கி வாசிப்பாராயின் சந்தோஷத்தால் வரும் இன்பத்தை எவ்விதமென்று படிப்போர்க்கல்லோ உண்மை விளங்கும்.

## N. சரவணமுதலியார்.

நெ-19 முத்துக்கிருஷ்ணன்தெருவு,

மின்ட் பிண்டிங் போஸ்ட்டு மதராஸ்.